Registered as a Newspaper பக்கங்கள் 8

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 19 04-09-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 198

## இலங்கையில் 5வீத பாடசாலைகளே முழுமையானவையாக உள்ளன

இலங்கையிலுள்ள 10590 பாடசாலைகளில் 523 பாடசாலைகள் மட்டுமே ஏ. பி தரத்தைக் கொண்ட முழுமையானவை என தெரிவிக்கப் படுகிறது. இது மொத்தப் பாடசாலைகளில் 5 சதவீதம் மட்டுமே. இப் பாடசாலைகள் மட்டுமே முதல், இடைநிலை மற்றும் சிரேஷ்ட இடை நிலை என்பவற்றுடன் உயர் நிலையில் விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளை கொண்டுள்ளன. இவ்வகையான பாடசாலைகள் மேற்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலுமே (8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் நல்லெண்ணத்தைகாட்டியுள்ளனர்

# அடுத்த கட்ட நடவடிக்கை அரசுடையதே!

## பூநகரிப் பகுதியிலிருந்து சிலைகடத்திய படை அதிகாரி

(கொழும்பு)

பூநகரிப் பகுதியிலிருந்து, நடராஜர் சிலை ஒன்றை கடத்தி வர எடுக்கப்பட்ட முயற்சி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இராணுவ அதிகாரி ஒருவரே இவ்வாறு கடத்தல் வேலையில் ஈடுபட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்பகுதிக்கு இச்சிலையை கடத்த முயன்ற இவ் அதிகாரி காங்கேசன்துறையில் வைத்து இராணுவ பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்குபாதைஅமைப்பு ஆராயப்பட்டு வருகிறது

### சிறிமானி அத்துலத்முதலி அறிவிப்பு

(கொழும்பு)

வடபகுதி மக்களின் நெடுந்தூரப் போக்குவரத்து மற்றும் புகையிரத போக்குவரத்துப் பாதைகள் அமைப்பது தொடர்பாக தற்போது விரிவாக ஆராயப்பட்டுவருவதாக சிறிலங்காவின் போக்குவரத்து அமைச்சர் சிறிமானி அத்துலத்முதலி தெரிவித்தார்.

வடபகுதி மக்களிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொண்டு செல்வதற்கு ஒரு பாதை அவசியம் என அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டியதாகவும் அவர் தெரிவித்தார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணையின்றி காவலிலுள்ள

## 200 தமிழ்க் கைதிகளின்

## பொலிசார்விடுதலைகுறித்து விமர்சனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் தனது காவலில் இருந்த பத்துப் பொலிசாரை விடுதலை செய்து சமாதானத்திற்கான தமது நல்லெண்ண சமிக்கையைக் காட்டியுள்ளனர். இதன் மூலம் சமாதானத்திற்கான அடுத்த கட்ட நடவடிக்கை அரசாங்கத்திடம் விடப்பட்டுள்ளது என பிரான்ஸ் செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் அமால் ஜெயசிங்கா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த 10 யுத்தக் கைதிகள் விடுவிக்கப்பட்டமை மூலம் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிக்கான நல்ல சமிக்கையை காட்டியுள்ளனர்

விடுதலைப் புலிகளின் இந் நடவடிக்கையினால் சமாதானத்திற்கான அடுத்த நடவடிக்கை இப்போது அரசாங்கத்திடமே விடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட பொருள்களில் சில பொருள்களிற்கான தடை நீக்கம் அறிவிக்கப்பட்டு 48 மணிநேரத்தில் புலிகள் மேற்கொண்ட இந் நடவடிக்கை மிகவும் வரவேற்கத் தக்கது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளையாழ்ப்பாணத்தின் மீதான பொருளாதாரத் தடையை நீக்கியதற்காக, (8 ஆம் பக்கம் பார்க்க)

## தடையை நீக்கினால் மட்டும் போதாது போக்குவரத்திற்கும் வழிவேண்டும்

### -யாழ். அரச அதிபர்


(கொழும்பு)

யாழ் குடாநாட்டிற்கு பொருள்களைக் கொண்டு செல்வதற்கான தடையை நீக்கினால் மட்டும் போதாது. கம் முன்வரவேண்டும் என லண்டன் பி.பி.சியின் சிங்கள சேவைக்கு யாழ். அரசாங்க அதிபர் அளித்த பேட்டியில் தெரிவித்தார் திருப்பி அனுப்பப்பட்டதைச் சுட்டிக் காட்டிய அவர் இது ஒரு பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் தெரிவித்தார்

## வீரச்சாவு

யாழ் மாவட்டத்தில்கடந்த 30-ம் திகதி சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப். ஈழவேந்தன்/கஜமுகன் (கந்தசாமி கனகலிங்கம் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலி (8 ஆம் பக்கம் பார்க்க)



2-ம் லெப். ஈழவேந்தன் (கஜமுகன்)



வீரவேங்கை சூரக்குட்டி (முத்து அல்லது சுந்தர்ராஜன்)

## பொலிஸ் யுத்தக்கைதிகள்

## 200 தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

விசாரணையின்றி பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் இருநூறுக்கு மேற்பட்ட தமிழ்க் கைதிகள் விடுதலை தொடர்பாக மிக விரைவில் நடவடிக்கைஎடுக்கப்போவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி வைக்கப்பட்ட இவர்களின் விடுதலைக்கான ஆக்கபூர்வ நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தற்போது விரிவாக ஆராயப்படுவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளை

## படையினருக்கு விளக்கவே முகாம்களுக்கு விஜயம்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளை வடக்கு, கிழக்கு யுத்த பகுதியிலுள்ள படையினருக்கு தெளிவுபடுத்துவதே தமது வடக்கு, கிழக்கு இராணுவ முகாம்களின் விஜயத்தின் நோக்கம் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்கள்தடைநீக்கத்தை ஐ.தே.க. எதிர்க்காது

- காமினி

(கொழும்பு)

வடபகுதிக்குப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடைநீக்கப்பட்டமையை ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் எதிர்க்காது என்றும் ஆனால் பொருள்கள் உரிய் முறையில் பாவனையாளருக்கு கிடைக்கிறதா? என்பதை புதிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசநாயக்கா லங்காதீப பத்திரிகைக்கு தொிவித்துள்ளார்.

[8 ஆம் பக்கம் பார்க்க)

பொருள்களைக் கொண்டு செல்வதற்கான தடையை நீக்கினால் மட்டும் போதாது. அது மக்களைச் சென்றடைவதற்கான போக்குவரத்து வசதியையும் வகுக்க அரசாங் சேவைக்கு யாழ். அரசாங்க அதிபர் அளித்த பேட்டியில் தெரிவித்தார்

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்கள் சில தடைமுகாம்களில் தடுக்கப்பட்டு மீண்டும் ஒரு பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் தெரிவித்தார்

பொருள்களைக் கொண்டு செல்வதற்கு ஒரு சீரான

(8ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசு உடன்காண முடியாது

### ராவய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குஒர் அரசியல் தீர்வை புதிய அரசாங்கத்தினால் உடனடியாக முன்வைக்கமுடியாது என 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அரசியல்யாப்பின்படி ஜனாதிபதியிடம் சர்வ அதிகாரம் இருப்பதினால் அவர் இம்முயற்சிகளைக் குழப்பலாம் என்றும் எனவே புதிய அரசாங்கம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டும் வரை இதே இழுபறி நிலையில் தான் செயல்ப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடலாம் என்றும் இன்று வடபகுதி மக்களின் தபால், போக்குவரத்து, தொலைத்தொடர்பு மற்றும்மின் வசதிகளை அம்மக்களுக்கு வழங்கி அவர்களிடையே நம்பிக்கை ஏற்படுத்த வழி வகுக்க வேண்டும் என்றும் இதனை அரசாங்கம் இன்று செய்யும் என தான் நம்புவதாகவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய பொலிசார் விடுதலைக்கு உதவுமாறு பிரதமரைகோருவோம்

### விடுதலையான பொலிசார் தகவல்

(கொழும்பு)

எனது உடன் பிறவாத சகோதரர்கள் இன்னும் காவலில் இருக்கிறார்கள் அங்கிருக்கும் 19 பொலிசாரினதும், 21 இராணுவத்தினரினதும் விடுதலைக்கு உதவுமாறு, நாம் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவை கோர இருக்கிறோம் என, நேற்று முன்தினம் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட பொலிசாரில் ஒருவரான தஸநாயக்க என்பவர் தெரிவித்துள்ளார்.

இரத்மலானைவிமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் உரையாடிய

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் யுத்தக்கைதிகள் கொழும்புசென்றடைந்தனர்

(கொழும்பு)

நேற்று முன்தினம் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட பத்துப் பொலிசாரும் நேற்று மாலைஇரத்மலானை விமான நிலையத்துக்கு விசேட விமானம் மூலம் சென்றடைந்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது.

நேற்று பி. ப. 4-00 மணியளவில் இவ்விமானம் இரத்மலானையை சென்றடைந்த போது, விமான நிலையத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் போரை நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பலாபலனாலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கு பதிலை தரக்கூடிய வகையில் புலிகள் இவர்களை விடுதலை செய்துள்ளார்கள் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசிற்கு புலிகள் நல்லபதில் தந்துள்ளனர்

(கொழும்பு)

அரசு எடுத்துவரும்நடவடிக்கைக்கு புலிகள நல்ல பதிலை அளித்துள்ளார்கள். அவர்கள் தமது சொந்த முயற்சியில் இதனை மேற்கொண்டனர் என வடபிராந்திய பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிசாரை இரத்மலானையிலிருந்து அழைத்துச் சென்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அப் பாது அவர் மேலும் தெரிவிக்கையில்;

பரஸ்பர நடவடிக்கை பேச்சுவார்த்தை மூலம் ஏற்பட்டதல்ல. அல்லது கேட்கப்பட்டதல்ல. அரசாங்கம் எடுத்த முயற்சிகளுக்கு பரஸ்பரமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என அவர் தெரிவித்தார்.

## லண்டனில் மருத்துவ ஆய்வுப்பட்டறை வட-கிழக்கு மருத்துவர்குழு பயணம்

(யாழ்ப்பாணம்)

மருத்துவ ஆய்வுப்பட்டறை ஒன்றிற்காக யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் வைத்திய அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று இலண்டனுக்கு பயணமாகின்றது.

எதிர்வரும் 17ஆம்திகதியும், 18 ஆம் திகதியும் இலண்டன் மாநகரில் மருத்துவத்துறை சார்ந்த தமிழ் அமைப்பு ஒன்றினால் நடாத்தப்படும் மருத்துவ ஆய்வுப்பட்டறைக்கு இந்த மருத்துவ அதிகாரிகள் குழுவும் அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு வருடங்களாக யுத்த சூழ் நிலையால் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடுமற்றும் போசாக்கின்மை போன்றவற்றின் விபரங்கள் அடங்கியஆவணங்களை எடுத்துக் கொண்டு இக் குழுவினர் கொழும்பு பயணமாகியுள்ளனர்.

இதே போல கிழக்கு மாகாணத்திலிருந்தும் இந்த ஆய்வுப் பட்டறைக்கு இவ்வாறான வைத்திய அதிகாரிகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மூடப்பட்டிருக்கும்

அனுமதி வழங்கும் செயலகங்கள், குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்கள், மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகங்கள், விசாரணைப் பகுதிச் செயலகங்கள், யாழ் வன்னித் தொடர்புச் சேவைச் செயலகம் என்பன நாளை திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்.

## தாயையும், சகோதரியையும் வெட்டிக் கொன்ற இளைஞன்

### சகோதரன் தப்பி ஓட்டம்

(தென்மராட்சி)

குடும்பத் தகராறுகாரணமாக பெற்ற தாயையும், தங்கையையும் மிகவும் கொடூரமானமுறையில் கோடரியால் வெட்டிக் கொன்ற சம்பவம் ஒன்று கடந்த முதலாம்திகதி உடையார் காட்டில் இடம் பெற்றது.

மேற்படி கொலைகளைச் செய்தவர் அண்மையில் திருமணம் செய்துவிட்டு கொழும்புக்கு சென்றிருந்தார் மீசாலையைச் சேர்ந்த இவரின் தாயாரும் சகோதரியும் தங்களது உடையார் கட்டு பகுதி தோட்டத்தில் வசித்து வந்தனர் கொழும்பில் இருந்து வந்த இவர் குடும்பத்தினருடன் ஏற்பட்ட தகராற்றினால் கடந்த முதலாம்திகதி அதிகாலை தாயார், சகோதரி, சகோதரன் ஆகிய மூவரும் வசித்து வந்த வீட்டில் வைத்து தாயாரையும் தங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ''சக்திப்பசளை''

வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் ''சக்தி'' பயிர்களுக்கு உரமூட்டி அன்றாட தேவைக்கு சத்துள்ள, தீங்கற்ற காய், கனிவகை தருவது ''சக்தி'' கூட்டெரு முறையிலான இயற்கைப் பசளை. கிலோ பக்கற் ஒன்று ரூபா 10/-. நல்லூரில் எமது காட்சிச்சாலையிலும் கிடைக்கிறது' ''மில்க்வைற்'' (சி/10222)

### புரோயிலர்குஞ்சுகள் விற்பனை

PRIMA பிறிமா ஒரு நாள் புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்குஒழுங்கை, மானிப்பாய்

(9271)

### நினைத்தாலே இனிக்கும்

மணலாறு கச்சான் அல்வா சுத்தமானது, சுவையானது. அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம் சம்பியன்லேன் கொக்குவில் எல்லா இனிப்புவியாபாரிகளிடமும்பெற்றுக்கொள்ளலாம்;

(9264)

### 'மாறாத மனங்கள்'

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய வாசகர் வட்டத்தினரால் 28. 08. 94 அன்று வெளியிடப்பட்ட திரு' தி. உதயசூரியனின் ''மாறாத மனங்கள்'' என்ற சிறுகதைத் தொகுதியினை யாழ். மாவட்டத்திலுள்ள சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (9275)

### தேவை

யாழ்ப்பாணம் வர்த்தக நிறுவனமென்றில் வேலை செய்யும் இருவருக்கு தங்குமிடம் தேவை. (ROOM) இடவசதியுள்ளவர்கள் கீழ் காணும் முகவரிக்கு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விள. இல. 349 மே/பா. ஈழநாதம், யாழ்ப்பாணம் (9268)

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதி முதலாம் ஒழுங்கையில் $2\frac{1}{2}$ பரப்பு வீட்டுக்காணி விற்பனைக்கு உண்டு.

---

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் நடாத்தும்

# லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவை யொட்டி

## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

1994 09-26 லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களிடையே சிறுகதை, கவிதை கட்டுரைப் போட்டிகளை நடாத்த விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

### போட்டி விதிமுறைகள்

#### கீழ்ப் பிரிவு (12 வயதிற்குட் பட்டோர்)

01. கவிதைகள் பதினைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் ஐம்பது சொற்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்
 அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
 ஆ. இந்திய இராணுவத்தின் கொடுமைகளால் தமிழ் மக்கள் அடைந்த துன்பம் என்பவற்றுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

#### மத்திய பிரிவு [13 வயது தொடக்கம் 16 வயதுக்குட்பட்டோர்]

01. கவிதைகள் இருபத்தைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், சிறுகதை கோட்டுத்தாளின் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரை இருநூறு சொற்களுக்குள் அமைய வேண்டும்.
02 படைப்புக்களின் உட்பொருள்,
 அ. லெப் கேணல் திலீபனின் ஈகம்
 ஆ. இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் தமிழ் மக்கள் புலி வீரர்களைக் காத்த விதம்.
 இ. லெப். கேணல் திலீபனின் வீரச்சாவின் போது மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பும், இந்திய எதிர்ப்பு உணர்வும் என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்

#### மேற் பிரிவு [17 வயதிற்கு மேற்பட்டோர்]

01. கவிதைகள் நூறு சொற்கள் வரையிலும், சிறுகதைகள் கோட்டுத்தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் கோட்டுத்தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் அமைய வேண்டும்
02. படைப்புக்களின் உட்பொருள்,
 அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
 ஆ. இந்தியா எம் மண்ணுக்கு செய்த துரோகம்
 இ. எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்ட காலத் தொடர்புகள் இன்றைய நிலைமை,
 ஈ. இந்திய இராணுவம் எம் மண்ணுக்கு வந்ததற்கான பின்னணி.
 உ. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை எம் மண்ணில் இருந்து அகற்றுவதற்காக தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான நடவடிக்கைகளும், புலிகளின் நுண்ணிய போர்த்திறனும்.
 ஊ. இந்திய இராணுவம் புலிகளிடம் எவ்வாறு தோற்றது என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

கீழ், மேல், மத்திய, பிரிவுகளுக்கான பொதுவான விதி முறைகள்

01. படைப்புக்களைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
02. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம்.
03. போட்டியாளர் தனது (அ) பெயர்
 (ஆ) பாடசாலையின் பெயர்
 (இ) கல்வி கற்கும் ஆண்டு
 (ஈ) வகுப்பாசிரியர் அல்லது அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பம்,
 என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி, படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
 (உ) கடித உறையின் இடது பக்கத்தில் தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவுப் போட்டி என குறிப்பிடல் வேண்டும்.
04. படைப்புக்கள் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புச் செயலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. போட்டி முடிவுத் திகதி 10-09-94 முடிவுத் திகதிக்கு பிந்தி வரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
06 நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
07. கோட்ட, மாவட்ட ரீதியாக சிறுகதை, கவிதை. கட்டுரைப்போட்டியில் 1-ம்,

---

### வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழா சென்ற 30-ம் திகதி செவ்வாய்க்கிழமைகொடிஏற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தினமும் பிற்பகல் செபமாலை மறையுரை, திருப்பலி ஆகியன இடம் பெறுகின்றன. எதிர் வரும் 8-ம் திகதி வியாழக்கிழமை மாலை 4 30 மணிக்கு அன்னையின் திருச்சொரூபப் பவனி இடம்பெறும். (22)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப்பட்டமளிப்பு விழா 1994.09.10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொதுப் பட்டமளிப்புவிழா 1994.09.10 ஆம் திகதி மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பங்குபற்றும் பட்டதாரிகளுக்கு 1994 09 07 தொடக்கம் 1994 . 09 . 09 ஆம் திகதி வரை, காலை 9 30-12 00 வரையும், பிற்பகல் 1.30-3.30 மணிவரைக்கும் பட்டமளிப்பு விழா அங்கிகள் வழங்கப்படும்.

அங்கிகளைப் பெறவரும் பட்டதாரிகள் புகைப்படத்திற்கான ரூபா 30/- ஐ பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டையும், தமது பல்கலைக்கழக அடையாள அட்டையையும் கல்விக் கிளையில் சமர்ப்பித்து அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல்கலைக்கழக அடையாள அட்டை இன்றி அங்கிகள் வழங்கப்பட மாட்டாது.

பதிவாளர்

திகதி: 1994-09 03

(சி-10264)

---

## நினைவு கூருகின்றோம்...

### 04. 09. 1994...

1986-ம்ஆண்டு இதேதினத்தில் மன்னார் கோட்டை சிறிலங்கா இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். காளி** (சந்தியாப்பிள்ளை ஜெராட் ஜோன்சன் - கங்காணித்தீவு - மன்னார்)

1987-ம் ஆண்டு வவுனியா - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கையிலை** (கோபாலசிங்கம் வன்னியசிங்கம்-கொந்தக்காரன்குளம்-வவுனியா)

வவுனியா-குருமண் காட்டுச் சந்தியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் தனம்** (நாகமணி வசந்தராசன் - தண்ணீரூற்று, முள்ளியவளை-முல்லைத்தீவு)

**2-ம் லெப். கண்ணன்** (சே. சிறீசேதுகாவலர்-குருமண்காடு - வவுனியா)

1988-ம் ஆண்டு யாழ்-பலாலிப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

**பேரின்பம்** (குருசுமுத்து மைக்கல்பிள்ளை-காங்கேசன்துறை-பலாலி)

1989-ம் ஆண்டு யாழ்-சுண்டிக்குளிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**முரளி** (இராசநாயகம் பிறேமதாஸ்-இணுவில் தெற்கு -யாழ்,

1990-ம் ஆண்டு வவுனியா-பாவற்குளம், 1-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய)

**சுஜிப் - சிறி** கணபதிப்பிள்ளை சிறிரஞ்சித்-பம்பைமடு - வவுனியா)

மட்டு-வாகரைப் பகுதியில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**முகிலன்** ( - சொறிவில்-12- அம்பாறை)

1993-ம் ஆண்டு அச்சுவேலி, கதிரிப்பாய்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். மருதன் - ரதீஸ்** (தில்லைநாதன் சுதாகரன் -இரணைஇலுப்பைக்குளம்-வவுனியா)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா முப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10242)

---

பதவி வெற்றிடம்

கையில் 2½ பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு விஷ்ணு முகவர் (பழைய நீதி மன்றுமுன்னால்) கண்டி வீதி, சாவகச்சேரி.
(9270)

## சேலைப்பை இனாம்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் நல்லூர் சண் காட்சி சாலையிலுள்ள அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருட்களை ரூபா 300/-க்கு கொள்வனவு செய்து ஒரு சேலைப் பையை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
[சி-10258]

## விற்பனைக்குண்டு

சிங்கர் டீப்பிறிசர் 300லீற்றர், 400 லீற்றர் (**SINGER DEEP FREEZER 300LITRES, 400 LITRES**)விற்பனைக்கு உண்டு. 27,(157/1)ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (9245)

## வெளிவந்துவிட்டது
## வியாழன் மாற்றம்

Prof.T.சத்தியதாஸன் கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்து விட்டது. சீவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினாவிடைகள் (சி-10101)

## வைத்திய சேவை

வயிற்றுப்புண், இருதய சுவாச வியாதிகள், வாதம், வலிப்பு மாதவிடாய் கோளாறுகள், மகப்பேறின்மை, மூலமூத்திர, தோல் வியாதிகள், **Digital Electronic** பரிசோதனைகளும் சிறந்த சிகிச்சையும் என பெயர் பெற்றது. இரெட்ணம் வைத்தியசாலை 129, ஸ்ரேஷன் றோட், யாழ்ப்பாணம்.
(9233)

---

07. கோட்ட, மாவட்ட ரீதியாக சிறுகதை, கவிதை. கட்டுரைப்போட்டியில் 1-ம், 2-ம், 3-ம் இடத்தில் தெரிவாகும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரின் படைப்பாற்றலை வெளிக்கொண்டு வரும் முகமாக நடாத்தப்படும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளுமாறும் அனைத்து தமிழீழ மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

## விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,
### மகளிர் பிரிவு

(9279)

---

### பண்டத்தரிப்புப்பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## கிளைக்குழுத் தேர்தல் -1994
### கிளைகளின் விபரம்

| கிளை இல. | கிளையின் பெயர் |
|---|---|
| 01 | மாதகல் |
| 02 | மாதகல் மத்தி |
| 03 | மாதகல் பரிஷ் |
| 04 | மாதகல் நுணசை |
| 05 | மாரீசன் கூடல் |
| 06 | பெரிய விளான் |
| 07 | சித்திரமேழி |
| 08 | சரஸ்வதி - பிரான்பற்று |
| 09 | பண்டத்தரிப்பு |
| 10 | சில்லாலை |
| 11 | வடலியடைப்பு |
| 12 | இளவாலை |
| 13 | பாரத்தனை |

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 17. 09. 1994 சனிக்கிழமை.
நேரம்: முற்பகல் 9 00 மணி தொடக்கம் முற்பகல் 10 . 00 மணிவரை.
நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இடம்: சகல கிளைகளுக்கான (01 தொடக்கம் 13 வரை) நியமனப்பத்திரங்கள் ''யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை'' உடுவில் றோட், மானிப்பாயில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனை எதுவும் இருப்பின் அன்றைய தினம் முற்பகல் 10.00 மணி தொடக்கம் முற்பகல் 11 00 மணிக்கிடையில் தேர்தல்/ உதவித்தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலமாகஒப்படைத்தல் வேண்டும்.

தேர்தல் இருப்பின் தேர்தலும் வாக்களிப்பும்; - 24 09 94 சனிக்கிழமை.
நேரம்:- முற்பகல் 9 00 மணி தொடக்கம் பிற்பகல் 4. 00 மணிவரை
இடம்:- யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை உடுவில் றோட் மானிப்பாய்.

குறிப்பு:- நியமனப் பத்திரங்கள் 10.09.1994 தொடக்கம் சங்கத்தின் சகல விற்பனை நிலையங்களிலும் நிவாரணக் கிளைகளிலும், தலைமைக் காரியாலயத்திலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச செயலகம்,
வலிதென் மேற்கு
சண்டிலிப்பாய்.

சு. கணேசமூர்த்தி,
தேர்தல் உத்தியோகத்தர்.
(சி/10261)

---

## ஈராண்டு நினைவுகள்



### க. நாகமணி
### (கிளாக்கர்)

மலர்வு:- 21-02-1911
உதிர்வு:- 06-09-1992

ஈராண்டு மறைந்ததுவே - எம்
ஆறாத்துயர் மாறவில்லை - ஐயா

இவரின் ஆத்மசாந்திக்காக 06-09-94 காலை 6.15 மணிக்கு யாழ். அடைக்கலஅன்னை ஆலயத்திலும்ஏழாலைபுனித இசிதோர் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்;
- குடும்பத்தினர்
'' ஜசிந்தா இல்லம் ''
ஏழாலை.
(9277)

---

## பதவி வெற்றிடம்

கணக்குப் பதிவாளராக கடமையாற்ற கடமையுணர்வும், தகுதியுமுள்ள ஒருவர் தேவை.

★ கல்வித்தகைமை:
க.பொ.த உயர்தரம் வர்த்தகப் பிரிவில் சித்தி-அல்லது அதற்கு குறைபாத தகுதி.

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேரில் வரவும்.

**பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம்**
இல. 19, சம்பியன் லேன்,
கொக்குவில்
(சி-9280)

---

### நல்லூர் வணிகர் கழகம்
## முக்கிய அறிவித்தல்

நல்லூர் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு 05 - 09 - 94 திங்கட்கிழமை நல்லூர் வணிகர் கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் முழுமையாக பூட்டப்பட்டிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்,

நன்றி

செயலாளர்
நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.
(சி-10263)

---

## அறிவித்தல்

மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலய வளர்ச்சி நிதிக்காக கடற்றொழிலாளர் சங்கம் 04-09-94-ல் பருத்தித்துறை பழைய பஸ் நிலைய முன்றலில் நடைபெறவிருந்த கலை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெறமாட்டாது என்பதையும் அதன் விபரம் பின்னர் பத்திரிகை மூலம் அறியத் தரப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்

அ. கேசவராஜா,
(செயலாளர்)
பழைய மா. ச.
(9282)

பொதுசன ... யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்

# பெண்கள் பிரிவில் குருநகர் வி. கழகம்; ஆண்கள் பிரிவில் பற்றீசியன் வி. கழகம்

## சம்பியன் பட்டங்களை வென்றன

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் யாழ்-செயலக விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்-மாவட்டரீதியில் நடாத்தப்பட்டு வந்த கூடைப்பந்தாட்ட போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் கடந்த வியாழன் 18-8-94 யாழ் பல்கலைக் கழக விளையாட்டு அரங்கில் பெருந்திரளான இரசிகர்கள் மத்தியில் யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திரு- கனகராசா தலைமையில் நடைபெற்றன-

முதலில் இடம் பெற்ற பெண்கள் பிரிவு இறுதி ஆட்டத்தில் குருநகர் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய யாழ்- கன்னியர் மடம் விளையாட்டுக்கழக அணியை 8:5 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று இவ்வருட சம்பியன் ஆனது. இதில் குருநகர் விளையாட்டுக் கழக அணி வீராங்கனை மர்லின் 4 புள்ளிகளையும் வீராங்கனைகள் றெமில்டா, மிதுலா ஆகியோர் தலா 2 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர். கன்னியர் மட விளையாட்டுக் கழக அணி வீராங்கனை அனுசியா 5 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார் இவ்ஆட்டத்திற்குதீர்ப்பாளர்களாகதிரு- அத்தப்பா, திரு- அகஸ்தீன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய யாழ் பல்கலைக்கழக அணியை 47:42 புள்ளிகள் கணக்கில் வென்று ஆண்கள் பிரிவுச் சம்பியன் ஆனது-

ஆரம்ப முதல் வெகு சிறப்பாகவும் போட்டா போட்டியாகவும் அமைந்த இந்தஆட்டத்தில் அரை இடைவேளையின் போது பல்கலைக்கழக அணி 29:20 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னணியில் நின்றது. அரை இடைவேளையின் பின் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளை பெற்ற போதிலும் ஆட்டம் நிறைவு பெறுவதற்கு 12 நிமிடங்கள் இருக்கையில் பற்றீசியன் அணி 32:32 என்ற புள்ளிகள் கணக்கில் சமப்படுத்திக் கொண்டது அதன் பின் ஆட்டத்தின் வேகம் இரு மடங்காகிய போதும் முதல் 4 நிமிடங்களும் இரு அணிகளும் புள்ளிகள் எதையும் பெறவில்லை. ஆட்டம் முடிவடைய 8 நிமிடங்கள் இருக்கும் பொது பல்கலைக் கழக வீரன் ரவிராஜபுத்திரன் அடுத்தடுத்து 2 புள்ளிகளை தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்-

அதலைத் தொடர்ந்து பற்றீசியன் அணிவீரன் நோபேட் வெகு சிறப்பாக ஆடி அடுத்தடுத்து 2 புள்ளிகளைத் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார், இதையடுத்து பல்கலைக் கழக வீரன் இராகுலன் 2 புள்ளிகளையும் பற்றீசியன் அணி வீரன்மோசஸ்2புள்ளிகளையும் தமது அணிச்குப் பெற்றுக் கொடுத்தனர். இவ்வேளையில் பற்றீசியன் அணி வீரன் பெனாண்டோ 2 புள்ளிகளைப் பெற்று மீண்டும் புள்ளிகளைச் சம நிலைக்க்க கொண்டு வந்தார்- ஆட்டம் முடிவடைவதற்கு 2 நிமிடங்கள் இருக்கையில் பல்கலைக் கழக அணிவீரன் இராகுலன் அடுத்தடுத்து 2 புள்ளிகளைப்

**டி. ஏ. எம். குணசிங்கம்**

(4ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு அரங்கு

# 'கிரிக்கெட்'டிலும் இன வேறுபாடா? குமுறுகிறார்கள் மூன்றாம் உலகத்தவர்

கிரிக்கெட் ஆட்டத்திற்கு சர்வதேச மட்டத்தில் வித்தியாசமானதொரு பரிமாணம் உண்டு. அதற்குக் காரணங்கள் பல இருக்கலாம் இதனைக் கனவான்களின் ஆட்டம் என்று அழைப்பதற்கு அதனூடாக வெளிப்படும் பண்புகள் முக்கியகாரணமாக இருக்கவேண்டும். இத்தகைய விளையாட்டில் சிறியதொருதவறு ஏற்பட்டாலும் கூட அது பெரிதுபடுத்தி விமர்சிக்கப்படுவது வழக்கம். இன்று கிரிக்கெட்டும் ஏனைய ஆட்டங்கள் போலவே தொழில்சார் நிலையை எய்திவிட்டதால் போட்டி மனப்பான்மைகள் வளர்ந்து விட்டதாலும் இவ்வட்டத்துக்குப் பொருந்தாத பண்புகளும் கூடவே வளர்ந்து வருவது துரதிஸ்டமாகும்.

இவ்வகையிற்றான்பந்தினை முறை கேடாகப் பாவித்தல் என்றொரு விடயம் கிரிக்கெட் உலகில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. கிரிக்கெட்டின் முக்கிய ஆயுதமெனக் கருதப்படும் பந்து தானாக ஏற்படும் மாற்றங்களுக்கு உட்படலாமே தவிர வீரர்களால் எதுவிதத்திலும் சேதமாக்கப் படக்கூடாது என்பது விதி. ஆனால் பாகிஸ்தானின் நட்சத்திர ஆட்டக்காரரும் சகல துறை வல்லவரும் முன்னை நாள் அணித் தலைவரும் மேலாக ஒக்ஸ்போட் பல்கலைக்கழக அணித்தலைவராக விளங்கியவருமான இம்ரான் சான் தற்போது ஓய்வுபெற்ற நிலையில் அவர் குறித்த புத்தகம் ஒன்றிற்கு அளித்தபேட்டியில், தான் பந்தினை முறை கேடாகப் பயன்படுத்தியமையைஒப்புக்கொண்டுள்ளார். இதன் காரணமாக கிரிக்கெட் விமர்சகர்களின் உணர்வலைகள் பல்வேறு விதமாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

### இம்ரான்கான் தகுதி குறைந்தவரா?

1987-ல் ஜெய்ப்பூரில்நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் டெஸ்ட் போட்டியைப் பார்வையிட அப்போதைய பாகிஸ்தான் அதிபர் சியாவுல்ஹக் வந்ததாகவும் இதன் காரணமாக எப்படியும் தன் நாட்டை வெல்ல வைக்க வேண்டும் என்பதற்காக குளிர்பான மூடியால் பந்தின் மேல் புறத்தை இம்ரான் சேதப்படுத்தினார் எனவும் பாகிஸ்தான் ஆட்டக்காரர் யூனுஸ் அகமத் ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். இதேசமயம் ஹம்ப்சயர் கவுன்டி ஆட்டமொன்றில் ரசிகர் மத்தியில் விறுவிறுப்பு ஏற்படச் செய்வதற்காக மூடியால் பந்தினைச் சுரண்டியதாக இம்ரான் தனது நூலில் ஒப்புக் கொண்டுள்ளார்.

உலகின் சிறந்த கிரிக்கெட் வீரருள் ஒருவர் இப்படிச் செய்திருப்பது அவமானகரமானது என்பது கபில்தேவின் வாதம்சிறிகாந்த் சிறிது பக்குவமாக இதெல்லாம் பெரிதுபடுத்தத் தேவையில்லாதது' இம்ரானின் திறமை இப்படிச் செய்வதனூடாகத்தான் வெளிப்பட வேண்டுமென்பதில்லை என்கிறார்.

அண்மையில்தென் ஆபிரிக்க அணிக்கு எதிராக இங்கிலாந்து ஆடிய முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தின் அணித் தலைவர் மைக் அத்தர்டன் கால்சட்டைப் பாக்கெட்டில் மண் வைத்திருந்து பந்தின் பளபளப்பைப் போக்க அதனைப் பயன்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டார். அவர் செய்தது மிக வெட்கக்கேடான செயல் என்கிறார்கள் கிரிக்கெட் விமர்சகர்கள். ஆனால்கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து இதனை மூடி மறைக்கப் பார்க்கின்றது என்றும் கூடவே குற்றஞ் சாட்டுகிறார்கள். குறிப்பாக உபகண்ட வீரர்கள் விமர்சகர்கள் அத்தர்டன் மீது எடுக்கப்பட்ட 'சாதுவான' நடவடிக்கையைக்கண்டிக்கிறார்கள்.

இதுதொடர்பாகக் கருத்துக் கூறுகையில் 1976 ல் இந்தியாவுக்கு வந்த இங்கிலாந்து அணியும் அதன் வேகப் பந்து வீச்சாளர் ஜோன் லீவரும் நினைவுக்கு வருவார்கள். இவர் பந்தில் மேலதிக ஸ்விங் ஏற்படுத்த வஸ்லின் கிறீமை பாவித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டார். ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட்சபை இவர் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக இக்குற்றச்சாட்டை முன்வைத்த பிசன் சிங்பேடி நொதம்டன்யர் கவுண்ட்டி கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து இடை நிறுத்தப்பட்டார்.

**- நிர்மலன் -**

1992ல் பாகிஸ்தான் இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரில் ஈடுபட்டிருந்தபோது வசீம் அக்ரமும், வக்கார் யூனிசும் பந்தை முறைகேடாகப் பாவித்தார்கள் ஏமாற்றுக் காரர்கள்-என்றுகுற்றம் சாட்டப்பட்டார்கள். உண்மையில் இவர்களின் திறமை மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியே இந்தக்குற்றச்சாட்டுக்குக்காரணம் என்கிறார்கள் இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள்.

வக்கார் எத்தகைய பந்து வீச்சிற்கு ஏமாற்றுக்காரர் என்று குற்றம் சாட்டப்பட்டாரோ அதேபோல் அண்மையில் டரன்கோ தென்ஆபிரிக்காவுக்கு எதிராக பந்து வீசி 3 பந்துகளில் 2 விக்கெட்டுகளைப் பெற்றபோது இங்கிலாந்து இவரை ஏமாற்றுக்காரர் என்று தூற்றவில்லை மாறாகப் புகழ்ந்து தள்ளியது. ஆகவே இங்கிலாந்து பாராட்டுவதிலும் தூற்றுவதிலும் கூட ஒரு அளவு கோல் வைத்திருக்கிறது போலத்தெரிகிறது என்று விசனம் தெரிவிக்கிறார்கள் வக்காரும், வசீமும்.

### விமர்சகர்களின் நோக்கு

பாரூக் என்ஜினியர் இந்தியாவின் முன்னைநாள் தலைசிறந்ததொரு விக்கெட் காப்பாளர். இவர்ICC - TCCBஐ இரட்டை வேடக்காரர்கள் என்று குற்றம் சாட்டுகிறார் காரணம் இவர்கள் அத்தர்டன் இங்கிலாந்து நாட்டுக்காரர் என்பதால் அவரைக் காப்பாற்ற முனைந்தமையாகும். சிறுபையனாகவே தம் குடும்ப நண்பர் தொடர்பில் அறிந்து வைத்திருக்கும் அத்தர்டன் இப்படி நடந்திருக்ககூடாது. தனது தலைமைப்பதவியை விட்டு விலகியிருக்க வேண்டும் என்கிறார்.

பந்தை முறைகேடாகப் பாவித்தல் என்பது பந்தில் மாற்றம் ஏற்படுத்துவதுமட்டுமல்ல என்பது சிறிலங்கா கிரிக்கெட் விமர்சகர் மகிந்த விஜேசிங்கவின் வாதம் தற்போதைய அந்தர்டன் விடயத்தை வெட்கக்கேடானது என்று கூறும் இவர் 60 வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்து அணித் தலைவர் டக்ளஸ் ஜார்டின் நடந்து கொண்ட முறைபற்றிக் குறிப்பிடுகின்றார். டொன் பிராட்மனின் திறமைக்கு முகம் கொடுக்க முடியாத இவர் பிராட்மனின் துடுப்பாட்டத் திறமையைக் குறைப்பதற்காக **Body Line Bowling**ஐ அறிமுகப்படுத்தியதை கசப்புடன் நினைவு கூர்கிறார். குறிப்பாக லாவூட் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் துடுப்பை விடுத்து அவுஸ்திரேலிய அணியினரின் உடல்களையே இலக்காகக் கொண்டனர். இச்சம்பவத் தொடரை நினைவு கூரும் இவர் அந்தர்டன், ஜார்டின் இருவரும் இங்கிலாந்தின் அணித்தலைவர்களே. ஜார்டின் பந்தினை முறை கேடாகப் பாவித்ததென்பதுடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இலகுவில் வெற்றி வாய்ப்பு ஊகிக்க முடியாத 'சிங்கர்' உலகத் தொடர் கிரிக்கெட் போட்டி

ஷார்ஜாவில் நடைபெற்ற அவுஸ்ரலேஷியக் கோப்பைக்கான கிரிக்கெட் தொடரைத் தொடர்ந்து, இன்று கொழும்பில் ''சிங்கர் உலகத்தொடர்'' என்ற பெயரில் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்

...

தாடக்கூடியவர்கள். ஹீரோ கோப்பைத் தொடரிலும் இவர்கள் பலம் வாய்ந்த அணிகளுக்குப் பதிலடி கொடுத்தவர்கள். ஒவ்வோர் ஆட்டங்களிலும் நல்ல படிப்பினையைப் பெற்றுக்கொள்பவர்கள். பந்து

# 'சிங்கர்' உலகத் தொடர் கிரிக்கெட் போட்டி

தேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி வரை பிரேமதாசா (கெத்தாராம) அரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. இந்நான்கு அணிகளுமே தற்போது உலகில் ஒருநாள் போட்டிகளுக்குப் பெயர்போனவை. ஆகவே இக்கிரிக்கெட் போட்டித்தொடரில் நடைபெறவிருக்கும் சகல ஆட்டங்களும் விறுவிறுப்பாக அமையும் என்பதில் ஐயமேதுமில்லை. இச்சுற்றுப்போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரிப்பது எந்த அணி என்பதை இலகுவில் ஊகிக்க முடியாததொன்றாகும்.

## இலங்கையில் வீறுடன் வெற்றி கண்டவர்கள்

அண்மையில் நிகழ்ந்து முடிந்த அவுஸ்ரலேஷியக் கோப்பையை பாகிஸ்தான் அணி தட்டிச் செல்வதற்கு அணியின் முன்வரிசை துடுப்பாட்டக்காரர்களே காரணம். அமீர் சோகேல், அன்வர், இன்சாமாம் உல்ஹக், சலீம் மலீக் ஆகியோருடன் முஜ்ரபா ஆகியோர் ஆட்டத்தில் தமது பங்களிப்பினை மிக வேகமாகவும், சாதுரியமாகவும் ஓட்டங்களைக் குவிக்கத் தவறுவதில்லை. இன்னும் அணியின் இளம்வீரன் பாஸிட் அலியும் குறிப்பிடத்தக்கவர். அவுஸ்ரலேஷியத் தொடரில் நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் இன்சாமாம் உல்ஹக் உம், அமீர் சோகேல் உம் சோடிசேர்ந்து 263 ஓட்டங்களை பெற்றிருந்தனர் இதில் இன்சாமாம் 129 பந்துகளைச்சந்தித்து 137 ஓட்டங்களை மிகத் துரிதமாக பெற்று அவ்வாட்டத்தின் கதாநாயகனானார்.

இவ் ஓட்ட எண்ணிக்கையில் 15 பவுண்டரிகள் அடங்கும். அடுத்துச் சோடி சேர்ந்த அமீர்சோகேல் 146 பந்துகளைச் சந்தித்து 134 ஓட்டங்களைப் பெற்றவர். இவரது ஓட்ட எண்ணிக்கையில் 12 பவுண்டரிகள் அடங்கும். இந்தச் சோடி பெற்ற ஓட்ட எண்ணிக்கையானது கடந்த 23 வருட உலகின் ஒரு நாட் போட்டிகளில் இது உலக சாதனையாகும். இதற்கு முன்னதாக, மேற்கிந்திய அணியின் விவியன் ரிச்சாட்சும், கோர்டன் கிரீனீட்ஜ் உம் இந்திய அணிக்கெதிராக 221 ஓட்டங்களைப் பெற்றனர். ஆனால், இத்தொகையினை மிகக்குறுகிய காலத்திலேயே அவுஸ்ரேலியா அணியின் அலன் போடரும் டீன் ஜோன்சும் இலங்கை அணிக்கெதிராக 224 ஓட்டஎண்ணிக்கையாக உயர்த்தினர். ஆனால், இத்தொகையையும் பாக் வீரர்கள் முறியடித்து விட்டனர். எனவே, இளம் வீரர்கள் கொண்ட பாக் அணியில் துடுப்பாட்டத்திற்குக் குறைவில்லை என்பதால் எதிரணிகள் திணறவேண்டியுள்ளது.

பந்து வீச்சில் உலகின் வேகப்பந்து வீச்சாளர்கள், இரட்டைப்புயல்கள் என எல்லோராலும் வர்ணிக்கப்படும் வாசீம் அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகியோரின் பந்து வீச்சுகளுக்கு எதிர்த்தாடுவதற்கு எதிரணி துடுப்பாட்டக்காரர்கள் திணற வாய்ப்புக்கள் அதிகம். அண்மையில் நிகழ்ந்த அவுஸ்ரலேஷியக் கோப்பைத் தொடரில் வக்கார் யூனிஸ் ஆடத்தவறினாலும் இத்தொடரில் பங்குபற்றவிருக்கின்றார். இவர் 89-90 தொடரில் 6 விக்கெட்டுகளுக்கு 26 ஓட்டங்களை இலங்கை அணிக்கெதிராக விட்டுக்கொடுத்தவர். மேலும் இதே தொடரில் வாசீம் அக்ரம் அவுஸ்ரேலிய அணிக்கெதிராக தொடர்ந்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தியவர். எனவே, பாகிஸ்தான் அணி இவ்இரட்டைப் புயல்கள் உள்ளவரை எதிரணியைச் சமாளிக்கத் தகுந்தவர்கள். மேலும் சலீம்மலீக் சிறப்பாகவும், சாதுரியாகவும் ஒரு நாட் போட்டிகளில் பந்து வீசத் தவறுவதில்லை. எனவே, சகல துறைகளிலும் முன்னேற்றமுள்ள பாக். அணி இத்தொடரில் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பு அதிகமுண்டு எனலாம். மேலும் இலங்கையுடன் மோதிய ஐந்து ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தொடரில் 4-1 என்று பாகிஸ்தான் வென்றிருப்பது இவர்களின் மனோநிலையில் மிகவும் தைரியத்தை ஏற்படுத்திபிருக்கும்.

## ஹீரோ கிண்ணத்தை வென்ற இந்தியர்

ஒரு நாள் போட்டிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரன் சச்சின் டெண்டுல்கார் இக்கிரிக்கெட் தொடரிலும் எதிரணிப் பந்து வீச்சாளர்களுக்குத் தனது சவாலை வெளிப்படுத்தினாராயின், இந்திய அணி தொடர் ஆட்டங்களில் தனது துடுப்பாட்டத்தில் நல்லதோர் ஆரம்பத்தைப் பெற்றுக்கொள்ளும் எந்தப் பெரிய அநுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர்களைக் கூட நிலைகுலைய வைக்கும் திறன் சச்சினுக்குநிறையவே உண்டு. இதைவிட, பந்துவீச்சும் மிகச் சாதுரியமாக ஆடும் திறமை சச்சினுக்கு நிறையவே உண்டு. ''ஹீரோ'' கோப்பையின் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கான அரையிறுதியாட்டத்தில் தென்ஆபிரிக்கஅணியினைகடைசிஓவரை மிகத் துணிவுடன் வீசி கடைசி விக்கெட்டான அலன் டொனால்டை வீழ்த்தியதன் மூலம் இறுதியாட்டத்திற்குத் தகுதியானதும் சச்சினாலேயே. இன்னும் அணியில் ஜடேஜா, சித்து. அஸாருதீன், வினோத் காம்ளி ஆகியோரும்சிறப்பாகத்துடுப்பெடுத்தாடும்வல்லமை பெற்றவர்கள்.

மேலும் பந்து வீச்சில் சுழற் பந்து வீச்சாளர்கள் நிறையவே உள்ளார்கள். அனில் கும்ளே, ராஜேஷ் சௌகான் ஆகியோர் மிகத்துல்லியமாக ஆட்டத்தில் தமது பங்களிப்பையளிக்கத் தவறுவதில்லை. அதிலும் அனில் கும்ளே எதிரணியில் மின்னல் வேக ஆட்டக்காரர்களுக்கு சாதுரியமாகப் பந்து வீசுவார்.

பந்து தடுப்பைப் பொறுத்தவரை மைதானத்தின் வெளி எல்லையில் சித்து, அம்ரே' காம்ளி ஆகியோர் பந்தைத் தடுத்து மீண்டும் அதேவேகத்தில் மீள அனுப்புவதும், உள் எல்லைகளில் அஸாருதீன் சச்சின், ஜடேஜா ஆகியோரும் சிறப்பாகவே செயற்படுவதால், இத்தொடரில் வெற்றி வாய்ப்பு வீதத்தை இந்திய அணியும் இழக்காது.

## மார்க்டெய்லரும் வீரர்களும் விட்டுக் கொடுக்காதவர்கள்


ஆட்டம் எவ் உச்சக்கட்டத்தையடைந்தாலும் அதனைப் பொறுமையுடனும், சாதுரியமாகவும் ஆடும் அனுபவம் வாய்ந்த ஆட்டக்காரர்கள் நிறையவே உள்ளார்கள் பிரபலமிக்க வீரர் தற்போது அணியில் இல்லாவிட்டாலும், அணியைத் திறம்படவே கொண்டுநடத்தஅணியின்காப்டன்மார்க்ரெய்லர் உட்பட பலம்வாய்ந்த ஆட்டக்காரர்கள் ஸ்லேட்டர், டேவிட்பூண், கூஜஸ் ஆகியோர் உள்ளனர். இவர்களில் டேவிட் பூண் பல சந்தர்ப்பங்களில் அவுஸ்திரேலிய அணியைக் காப்பாற்றியிருப்பது அனைவரும் அறிந்தது. பந்துவீச்சில்மிகவேகமாக பிரபல்யமடைந்து வரும் சுழற் பந்து வீச்சாளர் ஷேர்னே வார்னே அற்புதமாக ஆட்டத்தை மாற்றியமைக்கக் கூடியவர். அணியில் வேகப்பந்து வீச்சாளர்கள் மைக் டிமோர்ட், கூஜஸ் ஆகியோரும் திறம்படச்செயற்படுவார்கள்.

**கதிர். குலேந்திரன்**
யாழ். இந்துக் கல்லூரி.

1992 இல் நிகழ்ந்த உலகக் கோப்பையின் இறுதியில் சிறந்தபந்துதடுப்பிற்கான விருது ஆஸ்திரேலியஅணிக்கே கிடைத்தது. பந்துத்தடுப்பில் இவர்கள் சிறப்பாகச் செய்தாலே, வெற்றி விளிம்பையடையலாம். எனவே, அனுபவம், பொறுமை விவேகமுள்ள ஆட்டக்காரர்கள் அடங்கிய அவுஸ்திரேலிய அணி இத்தொடரில் கோப்பையை சுவீகரித்தாலும் இதில் சந்தேகப்படுவதற்கிடமில்லை.

## மீளமைக்கப்பட்ட பலமான இலங்கையணி

அண்மையில் நிகழ்ந்து முடிந்த இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்தொடரில் டெஸ்ட் போட்டிகளில் தக்க பரிமாணமடையாவிட்டாலும் ஒரு நாட்போட்டிகளில் எந்தப் பலம் வாய்ந்த அணியையும் சமாளித்துக்கொள்ளும் அதிறன் இலங்கை அணிக்கு உண்டு. துரிதமாக ஓட்டங்களைக் குவிக்கும் முன் வரிசை ஆட்டக்காரர்களான



மகாநாம, அரவிந்த டீசில்வா, ஜெயசூரிய, ரணதுங்க ஆகியோர்களுடன் கல்பகே உம் சிறப்பாக துடுப்பெடுத்

பெற்றுக்கொள்பவர்கள். பந்து வீச்சில் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன், கல்பகே ஆகியோரும் விக்கிரமசிங்க, சமிந்த வாஸ், ரணதுங்க, அரவிந்த டீசில்வா ஆகியோரும் சிறப்பாகப் பந்து வீசக்கூடியவர்கள்.

அண்மையில் நடந்து முடிந்த அவுஸ்ரலேஷியக் கோப்பைத் தொடர்களில் அணியில் முக்கிய உறுப்பினர்கள் ஆடத்தவறினாலும் இத்தொடரில்இவர்கள் ஆடி எதிரணிகளை என்ன பாடுபடுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இப்பலம் வாய்ந்த அணிகள் பங்குகொள்ளும் இத்தொடரில் வெற்றியடையும் அணிக்கு 15 ஆயிரம் அமெ. டாலர்களும், இரண்டாம் அணிக்கு 7500 அமெடாலர்களும்சிறந்த ஆட்டக்காரருக்கு 1500 அமெ, டாலர்களும் முழுத்தொடரிலும் சிறந்த ஆட்டக்காரருக்கு4000 அமெ. டாலர்களும் வழங்கப்படவிருக்கின்றது.

இன்று 4-ம் திகதி இரவு பகல் போட்டியில் இலங்கை இந்தியாவை எதிர்த்தாடும். 7-ம் திகதி அவுஸ்திரேலியா பாகிஸ்தான் போட்டியும் 9-ம் திகதி அவுஸ்திரேலியா இந்தியாவை இரவு - பகல் போட்டியில் எதிர்த்தாடும். 11-ம் திகதி இலங்கை பாகிஸ்தான் போட்டியும், 13-ம்திகதி அவுஸ்திரேலியா - இலங்கை 15-ம் திகதி இந்தியா- பாகிஸ்தான் போட்டியும், 17-ம்திகதி இறுதிப்போட்டி கெத்தாராம அரங்கில் இரவு - பகல் போட்டியாக நடைபெறும்.

## உதைபந்தாட்டம்

# '94 உலகக்கிண்ண இறுதிப்போட்டி விதிகளில் ஏற்படுத்திய சர்ச்சை

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடைந்து விட்டன. பிரேசில் நான்காவது தடவையாக உலகக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இத்தாலி நான்காவது தடவை பெறவிருந்தசந்தர்ப்பத்தைஇழந்து விட்டது. போட்டிகள் முடிவடைந்ததும் உதைபந்தாட்ட விமர்சகர்கள், ரசிகர்கள் மனதில் எழுந்த கசப்பான வினா ஒன்றுதான். எல்லாம் மகிழ்ச்சிதான்; ஆனால் பெனால்டி முறையில் முடிவுகள் காண்பது சரிதானா? அதுவும் ஒரு இறுதியாட்டத்தில்? விமர்சகர்கள் பலவாறு கருத்துக்கள் கூறுகிறார்கள். இதனைக் கண்டிக்கிறார்கள். ஆனால் இதற்குச் சரியான மாற்று வழிமுறையொன்றைத்தர யாராலும் இயலவில்லை. மீளவும் ஆட்டத்தை நடாத்துதல் சாத்தியமற்றது உலகக்கோப்பை இறுதியாட்டம் என்ற பெரும் எடுப்பான ஏற்பாடுகளின் நோக்கில். அப்படியாயின் யாராவது ஒரு பகுதி கோல் போடும்வரைதொடர்ந்து ஆடுவதா? அது அபத்தமானது. அல்லது குத்துச் சண்டையில் போல புள்ளிகள் போடுவதா? இது உதைபந்தாட்டத்திற்குப் பொருந்தாது. இப்படியாக விமர்சகர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். ஆனால் பெனால்டி மூலம் தீர்வு காண்பது ஒரு நியாயமற்ற முறை என்பதில் எல்லோருமே ஒத்துப் போகிறார்கள். தற்போதைக்கு இந்நிலையில் மாற்றமில்லாது விட்டாலும் எதிர்காலத்தில் FIFA இதற்கான ஒரு வழியைக்கண்டு பிடிக்காமல் போகாது என்றும் ஆறுதல் பட்டுக்கொள்கிறார்கள்.

இதேவிடயம் தொடர்பாக இன்னொன்றை இங்கு எடுத்துக்காட்டலாம். இறுதியாட்டத்தில் பிரேசில் கோல் காப்பு வீரர் டவ்ரால், தன் எதிரணி சகா பக்யூலிகாவை அணைத்துக்கொண்டு கோல் வாயிலுக்குப் போகும் போது ''இதில்ஒன்றுமேயில்லை. இது விதியின் செயல்'' என்று ஆறுதல் கூறி அழைத்துச் சென்றிருக்கிறார். முதலாவது பெனால்ட்டியை இத்தாலிய அணித்தலைவர் பரேசிகோல் கம்பத்துக்கு மேலால்



அடித்து சந்தர்ப்பத்தை நழுவ விட்ட போது 'இதனால் நீங்கள் திறமை குறைந்தவர் என்று ஆகிவிடுமா என்ன' என்று தேற்றியிருக்கின்றார். பெனால்டி முறையின் அவலத்துக்கு இவை இரண்டும் நல்ல உதாரணங்கள். இப்படியாக பெனால்டி தொடர்பான உணர்வலைகள் பரந்து செல்கின்றன. இத்தாலிய பயிற்றுநர் அரிகோசச்சி ஒரு வித்தியாசமான மனிதர். இறுதியாட்டம்வரை மிகவும் உணர்ச்சி வசப்பட்ட மனிதர். ஆட்டங்களைப் பார்த்தவர்கள் அவர் மீது எரிச்சலடைந்தும் இருப்பார்கள். ஆனால் இத்தாலி தோல்வி கண்டதும் அவர் ஒரு தலைகீழான பாத்திரமானார். ஒரு தந்தைக்குரிய பரிவோடு அமைதியாக, தன் ஒவ்வொரு வீரனையும் தழுவி தேற்றிக் கொண்டிருந்தார். அதன் பின் அவர் இத்தாலி பற்றிய கூறிய கருத்துக்கள் எதிலுமே தன் அணியைப்பற்றி விட்டுக் கொடுக்கவேயில்லை. பெரிதும் சிறப்பாகவே கூறியிருக்கின்றார். பிரேசிலை மனந்திறந்து பாராட்டியுள்ளார். இவரை ஒரு சிறந்த விளையாட்டியல் புகழ் கொண்டவராக விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

இன்னொரு புறம் பிரேசில் நாட்டுக்கு விளையாட்டுக்கள் பொறுத்து மிகவும் மகிழ்ச்சியானதும், துக்கமானதுமான காலம் இது. ஏனெனில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தான் உலக அதிவேகக் கார் ஓட்டப்பந்தய வீரன், பலதடவை சாம்பியன் பட்டம் வென்ற அயர்டன் சென்னாலை ஒருகார்ப்பந்தயப் போட்டியொன்றில் அகாலமாகப்பறிகொடுத்திருந்தார்கள் இவ்வேளையில் பிரேசில் அயர்டன் சென்னாலை நினைத்துக் கண்ணீர் சிந்தியது. மைதானத்திலேயே தம் வெற்றியை பிரேசில் வீரர்கள் அயர்டன் சென்னாவிற்கு அர்ப்பணித்துவிட்டார்கள். பெபெட்டோ கூறுகிறார், 'மிகப் பெரியவீரன் சென்னா, அவரை நாங்கள் எம் இதயத்தில் நிலை நிறுத்தியிருக்கிறோம்' அவரைப் பற்றிய வாசகர்கள் எழுதிய பதாகைகளை பிரேசில் வீரர்கள் மைதானத்தில் ஏந்தியவாறுவலம் வந்தார்கள்.

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பிக்கும் முன்னமே சர்வதேச ரீதியாக றொமாரியோ றொபேட்டோபாகியோ ஸ்டொய்ச்கேவ் பெபிடோ அறியப்பட்டிருந்தார்கள் ஆனால் உலகக்கோப்பைப் போட்டிகள் நடைபெறும் போதே இவர்கள்புகழ்பெற்றுள்ளார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மாட்டின் டக்லின். சுவீடன் நாட்டைச் சேர்ந்த கலப்பினவீரனாகிய இவர் ஜேர்மானிய கழகமொன்றில் விளையாடுபவர். தற்போது உலகமறிந்த வீரர் இவர் சிறந்தொரு முன்னணி வீரர். மொத்தம் நான்கு கோல்கள் போட்டவர். இன்னொருவர் பல்கேரிய வீரர்லெட்ச்கோவ். ஜேர்மனியைத் தோற்கடித்ததில் இவரின்பங்குபெரிது. இன்னொருவர் டினோபாகியோ. இவரது நீண்டதூர உதைகள் இவரும் றொபேட்டோ பாகியோவும் சோடி சேர்ந்தாடும் அற்புதம் என்பன டினோவை உலகப்புகழ் பெற்றவராக்கி விட்டன. இன்னொரு வீரர் அலெய்ன் சுட்டர் சுவிஸ் வீரனாகிய இவர் மத்திய வரிசை ஆட்டக்காரர். அற்புதமான ஆட்டக்காரரானஇவர் 2ஆம் சுற்றிலேயே சுவிட்சர்லாந்து தோற்றதால் தொடர்ந்தாடும் சந்தர்ப்பத்தை இழந்தாலும் அதற்குள் புகழ் பெற்றுவிட்டார். இதேபோன்று ஆர்ஜென்ரீன படிஸ்டுடாவும் இடையிலேயேசந்தர்ப்பம் இருந்தாலும் அவரது அபாரமான திறமையால் புகழ் அடைந்துவிட்டார். மரடோனா இல்லாத ஆர்ஜென்ரீன அணியை ருமேனியாவுடனான போட்டியில் வெற்றிபெற வைக்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் வார்த்தைகளுக்கப்பாற்பட்டவை. இவ்வாறாகஇன்னும் சிலரும் இனங்காணப்பட்டாலும் இவர்களே முன்னணியில்நிற்கிறார்கள். அடுத்தகட்டம் இவர்கள் தற்போதுள்ள செல்வத்துடன் இன்னும் சேர்ந்து கோடீஸ்வரர்களாவதுதான்.

## 'கிரிக்கெட்'டிலும்

நோக்கும்போது அத்தர்டன் செய்தது பாதியளவு கூட வெட்கக்கேடானதல்ல என்று சாமர்த்தியமான ஒருபோடு போடுகிறார்

மேலும் தற்போது சிறிலங்கா வந்திருக்கும் பாகிஸ்தான் அணியினர்தான் கூடுதலாக இக் குற்றச்சாட்டுக்குட்படுபவர்கள், பாகிஸ்தான் அணித்தலைவர் சலீம் மாலீக், முகாமையாளர் இன்டகாப் ஆலம் இருவரும் அத்தர்டன் சம்பவத்தை நல்வாய்ப்பாகவே எடுத்துக் கொண்டு பந்தை இங்கிலாந்தை நோக்கி வேகமாக அடிக்கிறார்கள். யார் ஏமாற்றுக்காரர் என்பது இப்போது தெரிந்ததா என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு மகிந்த விஜேசிங்க பதிலளிக்கிறார். நீங்கள் நிரூபிக்கப்படாமல் இருந்திருக்கலாம் ஆதலால் நீங்கள் மேலானவர்களும் அல்லர். ஏனெனில் பாகிஸ்தான் கழகநிலை விளையாட்டுகளில் நடுவரால் பந்து வீச்சாளர்கள் பந்தை முறைகேடாகப் பாவித்தமை பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறார்கள். எனினும், வக்காளும், வசீமும் திறமையானவர்கள். அவர்களுக்கு மூடியோ வேறு எதுவுமோ தேவையில்லை அத்தகைய அற்புதமான பந்து வீச்சாளர்கள்'' என்று கூறுகிறார்.

இன்றைய கிரிக்கெட் உலகம் தொழில்சார் மயப்பட்டது. அதோடு வர்த்தகமயப்பட்டது. இந்நிலையில் இத்தகைய போக்குகள், அது தொடர்பான சர்ச்சைகள் ஓயப்போவதில்லை என்று கூறலாம். ஆனால் அற்புதமான கிரிகெட் ஆட்டம் இத்தகைய செயல்களால் கறை பூசப்படுவது மிகவும் துக்ககரமானதாகும். அதுமட்டுமன்றி விளையாட்டிற் கூட இன்றும் மறைமுகமாக வேனும் வெள்ளையர், கறுப்பர் என்ற பாகுபாடு காணப்படுவது போலவும் தோன்றுகின்றது. செய்யும் குற்றத்துக்கான தண்டனைகளில்கூடப்பாகுபாடு காணப்படுகின்றது ICC- TCCB யில்ஆதிக்கம் ஒரு சாராருக்கே காணப்படுவது போலவும் 3-ம் உலககிரிக்கெட் சபைகள் அவர்கள் கூறுவதற்கு எதிர்ப்புக்குரல் எழுப்பும் சக்தியற்றவர்கள் போலவும் காணப்படுவதாகத் தெரிகிறது. இது எதிர்கால சர்வதேசக் கிரிக்கெட் போக்கில் ஆரோக்கியமான தன்மையைக் காட்டுவதாக இராதென்று கூறலாம். ஏனெனில் பந்தினை முறைகேடாகப் பாவித்தல் என்ற குற்றச்சாட்டு ஏற்படும்போது இங்கிலாந்து அணிக்கும், ஏனைய ஆசிய அல்லது வேறு அணிகளுக்கும் இடையிலான அணுகு முறையில் ICC- TCCB மற்றும்அநேகமான இங்கிலாந்தின் பத்திரிகைகள், விமர்சகர்கள் நடந்து கொள்ளும் முறை அந்த வித்தியாசத்தைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது

## பெண்கள்பிரிவில்

பெற்று தமது அணியின் புள்ளிகள் எண்ணிக்கையை 24 ஆக்கினார்- அதேபோல் பற்றீசியன் அணி வீரன் பெனாண்டோ அடுத்தடுத்து 2 புள்ளிகளை பெற்று புள்ளிகளின் எண்ணிக்கையை மீண்டும் சமநிலைக்கு அதாவது 42:42 என்ற நிலைக்குக் கொண்டு வந்தார்.

ஆட்டம் நிறைவுறுவதற்கு 1 நிமிடமும் 30 வினாடிகளும் இருக்கையில் இரசிகர்கள் ஆட்டம் சமமாக முடிவடைந்து விடும் என்று நம்பியிருந்த வேளையில் பற்றீசியன் அணி வீரன் சகாயராஜா மெச்சத்தக்க விதத்தில் வெகு சாதுரியமாக ஆடி ஆர்க்குக்கு வெளியே நின்று பந்தைக் கூடைக்குள் போட்டு முதலில் 3 புள்ளிகளையும் அதனைத் தொடர்ந்து மின்னல் வேகத்தில் இயங்கி 2 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்து 47 : 42 என்ற புள்ளிகள் கணக்கில் தமது அணியை வெற்றியூட்டச் செய்தார். இவ் ஆட்டத்தில் பல்கலைக் கழக அணி வீரர்கள் ஜேசுராஜன் 10 இராகுலன் 16, ரவிராஜபுத்திரன் 16 புள்ளிகளையும் பற்றீசியன் அணி வீரர்கள் சகாயராஜா 16, பெனான்டோ 15, நோபேட் 10, மோசஸ் 6 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர் இவ் ஆட்டத்திற்கு தீர்ப்பாளர்களாகதிரு. ஜி. எஸ் சாந்திகரன், திரு ஆர். டேவிட் ஆகியோர்கடமையாற்றினார்கள்.


## கணக்காளர் தேவை

யாழ் நகரிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு அநுபவமும் திறமையும் உள்ள கணக்காளர் தேவை -வயது 30:40 வரை, சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 10-09-94க்கு முன்பு நேரில் தொடர்பு கொள்ளவும்.

**கிருஷிகா ஆடை அகம்**

69A, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்

(சி-10259)


## உணவு முத்திரை வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு கிராம அலுவலர் (J-134) பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரை வழங்கப்பட்டு வருகிறது.

நவாலி ப.நோ.கூ. சங்க கிளை 7, 8, 9 ஆகிய பிரிவுகளில் உணவு முத்திரை பெறுபவர்கள் எதிர்வரும் 07-09 94க்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (05


ST. PATRICK'S COLLEGE, JAFFNA

சமூக சேவையாளர்கள் தேவை

தகைமை: க. பொ. த. (சாதாரணதரம்) சித்திய

ஓராண்டு நினைவஞ்சலி

# அனுமதி விண்ணப்பம் - 1995

## பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்

முதலாம் ஆண்டு:- 01 - 02 - 89 - 31 - 01 - 90க்குள் பிறந்திருக்க வேண்டும்
நான்காம் ஆண்டு:- 1986 இல் பிறந்திருக்க வேண்டும்
ஆறாம் ஆண்டு:- 1984 இல் பிறந்திருக்க வேண்டும்
ஒன்பதாம் ஆண்டு:- 1981 இல் பிறந்திருக்க வேண்டும்

★ விண்ணப்பப்பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா. 100/- 05 - 09 - 94 தொடக்கம் 23 - 09 - 94 வரை பாடசாலை நேரங்களில் காலை 9.00 - 1.00 மணி வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 26 - 09 - 94ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9.00 - 12.00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதிப் பரீட்சைத் தினம் 08 - 10 - 94

**நேரம்:**

| ஆண்டு | சமுகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| 9 | 8. 00 | 8. 30 |
| 6 | 8. 00 | 8. 30 |
| 4 | 8. 00 | 8. 30 |
| 1 (இல: 01 - 100) | 8. 00 | 8. 30 |
| 1 (இல: 101 - 250) | 10. 30 | 11. 00 |

★ 6 ஆம், 9 ஆம் வகுப்புகளுக்கு நடாத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமை போல் யாழ் ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

- கல்லூரி அதிபர்

(சி-10235)

தகைமை: க. பொ. த. (சாதாரணதரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்' 18 இலிருந்து 40 க்கு இடைப்பட்ட வயதையுடைய சமூக சேவை வேலைகளில் ஆர்வமுடனும், அக்கறையுடனும் செயற்படத்தயாராக உள்ள பெண்கள் (மட்டும்) எவரும் விண்ணப்பிக்கலாம்.

சமூக சேவை நிறுவனங்களில் பணி புரிந்த அனுபவம் உள்ளவர்கள், சமூகசேவை தொடர்பான கல்வி, சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் எனில் மேலும் விரும்பத்தக்கது.

தொடர்புகட்கு:

**பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்**
வெய்யிலுகந்த பிள்ளையார் கோவில் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(9259)

## இலவச பார்மசி வகுப்புக்கு விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தினால் இரண்டாவது பார்மசி வகுப்புக்கான விண்ணப்பங்களை 14-9-1994க்குமுன்னர் எழுத்து மூலம் கோருகின்றோம். கல்வித்தகைமைமருந்தக உரிமையாளராயின் G.C.E (O/L) மருந்தகத்தில் வேலை செய்பவராயின் G.C.E. (O/L) சித்தியடைந்தவராகவும் ஆங்கிலம், விஞ்ஞானப் பாடத்தில் திறமை சித்திபெற்றவராக விருக்க வேண்டும். வயது எல்லை கணிக்கப்படமாட்டாது. எதிர்காலத்தில் அரச பாமசிஸ்ட் அல்லது எமதுசங்கத்தினால்நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இல்லாவிட்டால் அனுமதிப் பத்திரம் (லைசன்ஸ்) பெற்றுக் கொள்ள முடியாததால் மருந்தகங்களை தொடர்ந்து நடத்த முடியாது என்ற அறிவித்தல் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

நன்றி

**க. மு. பத்மநாதன் (செயலாளர்)**
**வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் கழகம்**

(சி-10262)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**திருமதி நாகேஸ்வரராசா கமலாசினி**

மடி தழுவிட **25-10-1949**
பிடி நழுவிட **14-09-1993**

**திதி: 4-09-94**

பேர் உவகை தந்த பொற் கமல வடிவே
போற்றியும் எமை வளர்த்த பெரும்
- குணவதியே
காருண்ய நிலவே கற்பகத்தருவே - எமை
காத்தும் அருள் புரிவாய்
-"கமலாசினி தாயே!

எமது இல்லத்தில் இன்று நடைபெறும் அன்னாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனை வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
4 - 9 - 94

கணவன், பிள்ளைகள்
மருமகள், பேரப்பிள்ளை
பெற்றோர், சகோதரர்கள்
உறவினர், நண்பர்கள்

(9242)

...திசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்.

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா

## 04-09-1994


நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று (04. 09. 1994) வெகு விமரிசையாக நடைபெறுகின்றது.

தமிழீழ பிரதேசத்தில் அமைந்துள்ள இந்து சமயக் கோவில்களில் பழைமை வாய்ந்ததும், மிகக் கூடிய நாட்கள் மொத்தம் இருபத்தைந்து தினங்கள் திருவிழாக்கள் நடைபெறுவதும், கூடுதலான மக்கள் திருவிழாக்களின் போது கூடுவதும் நல்லூர்க் கந்த சுவாமி கோவில் தான் என்றால் அது மிகையன்று.

இந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் பல தடவைகள் சமய விரோத படையெடுப்புக் காரணங்களால் சிதைக்கப்பட்டும் இங்கும் அங்கும் மாற்றப் பட்டும் காலத்துக்குக் காலம் பலரால் பேணப்பட்டு வந்துள்ளமையை வரலாறு கூறுகிறது.

தற்சமயம் கேணல் கிட்டு ஞாபகார்த்த சிறுவர் பூங்கா அமைந்துள்ள முத்திரைச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் உள்ள காணியிலும் இரண்டாவது தடவையாக கட்டப்பட்ட முருகன் ஆலயம் அமைந்திருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆலயத்தின் வரலாறு தனியாகப் பார்க்க வேண்டிய ஒன்றெனிலும் இத்தகைய அழித்தல், சிதைத்தல் நடவடிக்கைகளில் இன்றும் தோற்றப் பொலிவுடன் காணப்படுகின்ற நல்லூர்க் கந்த சுவாமி கோவிலின் மகத்துவம் சிந்திக்கற்பாலதே.



இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகிய இன்றைய காலத்தில் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் கொடியேறிவிட்டால் பூங்காவனத் திருவிழா வரையிலான ஏறத்தாழ ஒருமாத காலம் வடபுலத்தில் இளைஞர், யுவதிகள் என்றில்லாமல் சிறுவர், சிறுமிகள், பெரியோர் மத்தியிலும் குதூகலத்திற்கு குறைவிருக்காது.

அதேவேளை தினமும் தினத்திற்குத் தினமும் விரதம் அனுட்டிக்கும் பக்த கோடிகளின் வருகை, வழிபடல் மற்றும் மஞ்சம், கார்த்திகைத் திருவிழா, கைலாயவாகனம், மாம்பழத்திருவிழா, சப்பறம், தீர்த்தம், பூங்காவனம் போன்ற முக்கிய தினங்களில் பெருவாரியாக பக்தர்களால் செய்யப்படும் நேர்த்திக் கடனான காவடிகள் அவற்றிலும் துலா-தூக்கு-பறவைக் காவடிகளின் காட்சிகள் நல்லூர் வீதிகளில் பரக்கக் காணப்படுவதால் ஏற்படும் பக்தி பூர்வத்தையும் இந்த நல்லூர்க் கந்த சுவாமி கோவில் திருவிழாக் காலங்களில் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.

வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்துவதாக அமைவது ரதோற்சவம் என்று முன்னோர் காரணகாரியங்களால் வகுத்தும், பகுத்தும் கூறி இருக்கின்றனர்.

அத்தகைய வாழ்க்கைத் தத்துவத்தை நாமும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சென்று தேரோட்டத்தைப் பார்ப்பதன் மூலமாக கற்றுத்தெளிவோமாக! —'கவிகரன்'

அழகிய 22 கரட் தங்க நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்
லலிதா நகை மாடம்
213, லெப். கேணல் சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்

உங்கள் அந்தியகால
தேவைகளைப் பூர்த்தி செய்பவர்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

பான்சிப் பொருள்கள் மற்றும்,
நவீன விளையாட்டுப் பொருள்களுக்கு ஒரே இடம்
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69 கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்

குளிர்பானங்கள் மற்றும் கேக் தயாரிப்புப் பொருள்கள்,
பிஸ்கட், சொக்கலட், பழவற்றல்களை
சகாய விலையில் பெற்றிட,
கணேஷா வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

நல்லூர்க்கந்தன் தேரூர்க
நல்லோர்க்கின்பம் தானூர்க!
ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்
58, குறுக்கு வீதி, ... நல்லூர்.
ஆர். வீ. ஜி. மருந்தகம்
504, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

அண்ணாவின் மற்றொரு கண்டுபிடிப்பு!
★ இலகு தோசை மா
மற்றும் இலகு இட்டலிமா, கோப்பி, ஜீவாகாரம்,
ஊதுபத்திகள், பற்பொடி அனைத்தும் தரமான
தயாரிப்புகள்
அண்ணா தொழிலகம்
இணுவில்

அழகுப்பொருட்களின் சமுத்திரமாகத் திகழும்
ஒரே ஸ்தாபனம்
ஜெயா அழகு மாடம்
உதிரி, மொத்த விற்பனை நிலையம்
177 A. 187. மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம்

நல்லூரான் வீதி நடந்தார்க்கும் பொல்லா
வினைகள் தீரும்!
கயல்விழி நகைப்பூங்கா
(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
224 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவித சைக்கடிகாரங்கள், மற்றும்
சுவர் மணிக்கூடுகள் நியாய விலையில்
பெற்றுக்கொள்ள,
அல்டி

யாழ்நகரில் 35 வருடங்கள் சேவையில் மூத்த
ஒரேஸ்தாபனம் றேடியோ, ரி. வி. திருத்துநர்
விற்பனையாளர்
றேடியோமனுவல்
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

அலுமினியம் - எவர்சில்வர் பாத்திரங்கள்
மற்றும் அழகு சாதனப் பொருள்கள்,
சிறுவர் சைக்கிள்கள்,
நாகரிக விளையாட்டுப் பொருள்களுக்கு
கலா அழகுக் களஞ்சியம்
65, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விழிகள் உங்களிடம், அதன் ஒளி எங்களிடம்
எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி,

ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்,
திருமணம் மற்றும் முகூர்த்த பட்டுப் புடவைகளுக்கு
இளவரசி சேலைச் சோலை
57. நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

எழிலுறு காட்சிகளுடன் அழகுறப்
படம் பிடித்திட நாடுங்கள்
அஜந்தா போட்டோ
அன்ட் வீடியோ
63. சங்கிலியன் வீதி, நல்லூர்,
(முத்திரைச்சந்தையடி)

சகலவித வர்ண-கறுப்பு-வெள்ளை புகைப்படங்களுக்கு
இன்றும், என்றும்!
குணம் போட்டோ
(உபதபால் நிலையம் முன்பாக)
சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய்.

பதிப்பக வேலைகளைப்
பக்குவமாகச் செய்பவர்கள்
சாந்தி அச்சகம்
575, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

புதிய - பழைய பாடல்கள் உடனுக்குடன்
பதிவு செய்யவும் - பதிவுசெய்த பாடல்களை வாங்கவும்
யாழ். நகரில் ஒரே இடம்!
ஸ்கைறோஸ்
(ஒலிப்பதிவுக் கூடம்)
1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

புடவை வகைகளைத் தரமாக
தெரிவு செய்ய நாடுங்கள்!
★ சிற்றி ரெக்ஸ் ★
(நல்லூர் கோவில் முன்பாக)
556A, பருத்தித்துறை வீதி, நல்லூர்

மளிகைப் பொருள்கள், புடவை, அலுமினியம்
எதுவாகிலும் ஒரே இடத்தில்
வே. ம. சி. களஞ்சியம்

அண்ணா தொழிலகம்
இணுவில்

வைத்திய நிபுணர்களின் மருந்து சிட்டைக்கமைய
சரியாகக் கண்ணாடிகளைத் தருபவர்கள்
எஸ். எம். பெர்னான்டோ
580, ஆஸ்பத்திரி வீதி.
(இலங்கை வங்கி மருங்கில்)
யாழ்ப்பாணம்

அல்டி
£69/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
கணேசா நகையகம்
194, சந்தோசம் தெரு, (கஸ்தூரியார்)
யாழ்ப்பாணம்.

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

முதல்தர குளிர்பானங்கள், சிற்றுண்டி
வகைகள், குளிர்களி வகைகளை
சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்.
லிங்கம் கூல்பார்
(வெலிங்டன் சந்தி)
52, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்

எதுவாகிலும் ஒரே இடத்தில்
வே. ம. சி. களஞ்சியம்
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

சகல வர்ணக் கலவை (பெயின்ற்)களுக்கும்
நாடுங்கள்!
முருகன் வணிக நிலையம்
295, லெப். இளங்கோ தெரு
(21, மணிக்கூட்டுவீதி)
யாழ்ப்பாணம்.

சி/10223

சேவற்கொடி ஏந்தி, ஆடும் மயில் ஏறி மாதர் புடைசூழவா — நல்லூ - ரா! ஆவல் நிறை வேல வா!

சிறந்த ரகம்

இறக்குமதி செய்யப்பட்ட

சேட்டிங், சூட்டிங்,

ஸ்கேட் & பிளவுஸ்

பட்டுவேட்டி

சால்வைகளையும்

லலிதா பட்டுச்சோலை

நிதான விலை

மங்கள வைபவங்களுக்கேற்ற

கூறைச்சேலைகள்

காஞ்சிபுரம்

மலிவான விலையில்

பெற்றுக்கொள்ள ஒரே இடம்

லலிதா பட்டுச்சோலை

5, 6, A, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்

சி/10236

# நல்லூர்க் கந்தன் தேர்ப்பவனிச் சிறப்பிதழ்

மக்கள் துயர்களைந்து தேரேறி வரும்
முருகனே நீ வாழி!

**சிறிராம் விற்பனை நிலையம்**
326, மருத்துவமனை வீதி, (கேணல் கிட்டு சாலை)
யாழ்ப்பாணம்
(சி-10243)

வடிவேல் கொண்ட சண்முகனே
வந்தென் இடரை அறுப்பாயே!

**சிறி நதியா நகைமாடம்**
2 G, ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்
(சி10244)

வருவாய் முருகா அருள்வாயே குகனே

**சேது களஞ்சியம்**
356, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்
(சி-10245)

தங்க ரதமேறி செந்தில் வடிவேலன்
எங்கள் துயர்தீர்க்க தேரினிலே வருகின்றான்!

**ம. பத்மநாத்**
மிதிவண்டி உதிரிப்பாக விற்பனையாளர்
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
(சி-10246)

ஞால இருள்நீக்கி நல்ல ஒளியேற்ற
வேலன் ரதமேறி வருகிறான்!

**அறிவுக் களஞ்சியம்**
விற்பனையாகின்றது!
(சி-10247)

நல்லையில் பதியுறை ஞானதண்டிதா-உன்
வல்லமை நம்பினோம் வழிசெய்குவாய்.

## 04-09-1994

## நல்லைக் குமரன் நாம் வணங்கும் தெய்வம்

கோயில்கள் சமுதாய நிலையங்களாக நின்று வழிகாட்டும் வரலாறே உண்மையானது. கோயில்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நோக்கும் போது இக்கருத்து வலுவடைகிறது. எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன் இறைவன். எல்லாமாய் அல்லையுமாய்நிற்கும் பரம்பொருளுக்கு ஒரு கோயில் அதுவும் இத்தனை பெருங் கோயில்கள் தேவைதானா என்று கேட்கலாம். இதற்கு விடை அண்மைக் கால நிகழ்வுகள் சொல்லிப்போயின. ஊர் மக்களின் இன்னல் தீர்க்க கோயில்கள் சம்பிரதாயங்களை எல்லாம் ஒதுக்கி வைத்து முன்வந்தமையும் தியாகிகள் தங்கள் இலக்கை செயற்படுத்த இடம் தந்தமையும் நாம் நேரில் கண்டவையே. இவை எமது வீரவரலாற்றில் இடம்பெறும் செய்திகள். பல நூறு ஆண்டுகட்கு முன்னும். பஞ்சம், பனக வெள்ளப் பெருக்குப் போன்ற அனர்த்தங்களின் போதெல்லாம் கோயில்கள் மக்களின் புகலிடங்களாயின. தமிழக வரலாறு ஆக கோயில்கள் மக்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்தவை என்பது புலனாகிறது.


பொதுவாகப் புரியாத தத்துவங்களை விடுத்து கோயில் திருவிழாக்களை எண்ணிப் பார்த்தால் அவை எல்லாம் மக்கள் வாழ்வை, தடைகள் வெட்டப்பட்ட ஒற்றுமையை, ஒன்றுகூடலை, படைத்தவன் முன் நாம் எல்லாம் ஒன்று தான் என்ற உயர்வான சிந்தனையை வளர்க்கும் செயல்களாகவே அமைகின்றன.

நல்லைக்குமரன்தேர் ஏறி வரும் திருக்கோலங்கண்டுசெம் மாந்து நிற்கும் போது சிந்திக்க வேண்டியன சில உண்டு தத்துவ அடிப்படையில் தேர்த் திருவிழா திரிபுரதகனத்தை நினைவூட்டுகிறது என்றால் எம்மிடம், எமக்குத் தெரியாதே இருந்து கொண்டிருக்கும் மமதை அழிக்கப்பட வேண்டும் என்பது தானே. காலத்தின் பளுவையும், துன்பத்தையும் மறந்து கைகூப்பி நிற்கிறோம். தேவர்களை மீண்டும் குடி ஏற்றியவன். எமது தமிழ்வாழ்வை, தமிழ் மண்ணை மீட்டுத்தர வேண்டும் என்று வேண்டுகிறோம். தேர் இருப்புக்கு வருகிறது. பசுமையும், தண்ணளியும் குறிக்கும் 'பச்சை" அணிந்து, அணிவித்தும் இறங்கி வருகிறான். உள்ளங்கள் குளிர்கின்றன. மன அழுத்தங்கள் நீங்கியதால் உடல் பாவம் அற்றதாகிறது. ஏதேதோ பேசிய வாய்கள் ''கந்தா, கடம்பா, கார்த்திகேயா'' என்று ஓலமிட்டுத் 'திருவாய்கள்' ஆகின்றன. இது ஒரு அனுபவம்.

தேரடியில் கிடந்தவர்களை நாம் வணங்கும் தேசிகர்களாக்கியவன் நல்லைக் கந்தன். வேதாந்தத்தின் உச்சியாய் ஆகமத்துக்கும் அப்பாலாய் நிற்பவன் அலங்காரக் கந்தனாய் எம் உள்ளம் எல்லாம் கவர்ந்தவன். இன்று தேவைநோக்கிப்போலும் அன்னதானக் கந்தனாயும் நின்று அருள் தருகிறான். வாழ்த்துவோம் வணங்குவோம். ஒரு

★★★★★★★★★★★
மலராக்கம்
செல்வராஜா சுரேஷ்
★★★★★★★★★★★

வித்தியாசமான வேண்டுதல் செய்வோம். நல்லைக் கந்தா எல்லோரும் இனிது வாழ இன்னருள் தருவாய் என்று கேட்போம். ஒவ்வொருவருக்குமாகப் பல்லாயிரம் வேண்டுதல்கள் மிக்கவலிமை உடையது. கிடைப்பதும் உறுதி. சான்று அருளாளர் வாழ்க்கை நெறி.



மயில் ஏறும் மன்னவா! எம்மனமேற
இங்குவா!!

**கபிலா பதிப்பகம்**
369, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
சி 10239

சொல்லலைகள் தீர்ப்பதில் தோழனே
தொண்டர்க்கு அருள்வதில் வேலனே!

**ராசி பட்டுச் சோலை**
70, 71 A சிறப்பு அங்காடி (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
சி. 10240

சோர்வும் துயர் வாழும் துட்டர்பகையாவும்
கூறுபடச் செய்ய வா - குமரா!

**சாமி பல்பொருள் களஞ்சியம்**
313. கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
சி- 10250

நேரும் துயர் யாவையுமே - முருகா
நேரில் வந்து தீர்க்க வேண்டும்

**நதியா நகை மாடம்**
(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
இல. 2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
சி- 10251

புது யுகம் மலர,
வண்ணமயில் ஏறி வா - முருகா

**அபிராமி புடவை அகம்**
வெளிநாட்டு, உள்நாட்டு சாறி வகைகளையும்
சிறுவர்கள் சூட்ஸ் வகைகளையும்
மற்றும் பாட்டா பாதணி வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றிட

நல்லையில் பதியுறை ஞானபண்டிதா-உன்
வல்லமை நம்பினோம் வழிசெய்குவாய்.

## கிருஷிகா ஆடை அகம்

69 A, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சி-10253

நல்லையில் பதியுறை ஞானபண்டிதா-உன்
வல்லமை நம்பினோம் வழி செய்குவாய்

## ஸ்ரீ தாமோதர விலாஸ்

403, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சி-10254

எல்லையில் எதிரிகள் எறிகணையுடனே
ஏவல் படையினர் எம்மின அழிப்பில்
செயல்பட செவ்வேல் திருக்கரம் நம்பி
சேவிக்க வந்தேன் திருவருள் புரிவாய்.

## ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

## ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்

யாழ்ப்பாணம்

சி-10255

வேற்படை வேந்தே! கோலமயில் வாகனனே!
அல்லல் அகற்றி அருள் புரிவாய்.

## உதயன்வோச் வேக்ஸ்


இல.100, பருத்தித்துறை வீதி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

சி-10256

தத்துவ அடிப்படையில் தேர்த் திருவிழா திரிபுரதகனத்தை நினைவூட்டுகிறது என்றால் எம்மிடம், எமக்குத் தெரியாதே இருந்து கொண்டிருக்கும் மமதை அழிக்கப்பட வேண்டும் என்பது தானே. இதையே திருமந்திரம் ''மும்மலகாரியம்'' என்கிறது. கோயினின் நகரும் அம்சம் தேர் என்பர் இறைவன் தேர் ஏறி வருவதின் நோக்கமே 'சாம்பவ தீட்சை'' க்காக என்றும் கூறுவர். திருக்கோயிலினுள் போகமுடியாத நிலையில் உள்ளவர்களின் காட்சிக்காகத் திருவுலாவருதல் வானிழிந்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் அருட்செயலே எனலாம். இறைவனுக்குச் செய்யும் சிறப்புக்களில், உபசாரங்களில் சிகரமாகிய இராஜ உபசாரமே தேர்த்திருவிழா என்ற நம்பிக்கை மிகப் பழைமையானது.

''ஊர் கூடித்தேர் இழுத்தல்'' என்ற சொந்த தொடர் சிந்திக்கவைக்கும் ஒன்று. சமூக ஐக்கியம் ஒரு நாட்டின் வளமான வாழ்வுக்கு எத்தனை அவசியம் என்பதை வலியுறுத்துகிறது.

சந்தன் போர்த் தெய்வம். அவன் தொடுத்த போர் அறியாமையை அழிக்கும் போர். எத்தனையோ காலமாகப் போர் செய்கிறான். இன்னும் எமது அறியாமை இருள் முற்றும் அகன்றதாக இல்லை. ஆணவ இருள் அத்தனை வலுவானது என்பதை தத்துவ விற்பன்னர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். ஆறு திருமுகங்களும் அகிலம் எல்லாம் காண்கின்றன. பன்னிரு திருக்கரங்களும் நேசமுடன் நீண்டு எம்மை அணைக்கின்றன. ஆறிருதிருவிழிகளும் அருள் மழை பொழிகின்றன.



## "அற்புதத் தேரினில்" வருவாய் அருள்தரவே

ஈழவள நாட்டின்
பழம் பெரும் கந்தன்
நல்லூரான் திருவடி - தன்னில்
நல்குவாய் நல்லூர் நாதா!
திக்கெங்கும் புகழ் மணக்கும்
ஞானவேல் முருகனின் திருவடி
தீனரைக் காப்பாய் தேவர்
அணிதேரூர் நல்லை அமிழ்தா!
துன்பப்படும் அடியார்களுக்கு
அருள் பாலிப்பாய் வடிவேல்முருகா
நல் — ஊர் மண்ணில்
கால்பட்டால் பாவம் யாவும் தீர்ப்பவனே!

நவாலியூரான்
எஸ். ரமேஷ்

சூரனைக் கொல்வதில் சூரனே! சூரனாம் பொய்மையைத் தீரனே!

## திருமாட்டி

புடவைக்கடல்
122, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (சி.- 10238)

## அபிராமி புடவை அகம்

வெளிநாட்டு, உள்நாட்டு சாறி வகைகளையும்
சிறுவர்கள் சூட்ஸ் வகைகளையும்
மற்றும் பாட்டா பாதணி வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றிட
155, 156 சிறப்பு அங்காடி
ராசன், தெரு (மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

சி- 10252

தங்க ரதமேறி செந்தில் வடிவேலன்
எங்கள் துயர்தீர்க்க வருகிறான்!

## சீதா நகை மாடம்

27| ஏ, அர்ச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்

சி. 10249

நல்லூரான் வீதி நடந்தார்க்கும் பொல்லா
வினைகள் தீரும்!

## சாந்தி புடவை மாளிகை

157, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சி. 10237

நல்லைக் குமரேசன் வள்ளி மகிழ்நேசன்
தொல்லை அகல அருள் தருகிறான்!

## சோபிதா

பாடசாலை அலுவலக உபகரணங்கள் விற்பனையாளர்
363, காங்கேசன்துறைச்சாலை
யாழ்ப்பாணம்

(சி-10248)

# எம்பிலிப்பிட்டிய மாணவர் கொலை; புலன்விசாரணைக்கு உத்தரவு

காணாமல் போனவர்கள் பற்றி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கிக் கூற நடைபெற்றபத்திரிகையாளர்மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சூரியகந்தவில் மர்மமான முறையில் இடம் பெற்ற மரணங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும். சூரியகந்தவில் புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் உட்பட ஏனைய பொருள்கள் பற்றி பரிசீலனை நடத்துமாறு அரசாங்கம் பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் கேட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்படாது தடுப்பு முகாமில் இருப்போர்களை விடுதலை செய்யவும் ஏனையோருக்கு எதிராக வழக்குத் தொடரவும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகப் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பற்றி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படி நியமிக்கப்பட்டுள்ள மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தற்போது வழக்குத் தொடராமல் சுமார் 6000 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மூன்று அல்லது நான்கு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்

அரசியல் படுகொலைகள், காணாமல் போனோர் என்பது பற்றி மாசாண அடிப்படையில் தகவல்களைத் திரட்ட ஆணைக்குழுக்கள் நிறுவப்படும் அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றன. காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரசு நிதியமொன்றை அமைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

## பொதுக் கிணறுகளின் மீது அத்துமீறல் குடியிருப்பு

றெக்கிளமேசன் பகுதியில் பொதுமக்கள் பாவனைக்காக யாழ். மாநகர சபையினால் அமைக்கப்பட்ட பல பொதுக் கிணறுகள் இங்கு வாழும் சில தனவந்தர்களினால் உடைத்து அவர்களுடைய சொந்தக்குடியிருப்புக்களாக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை அண்மையில் நடாத்திவரும் திடீர்ப் பரிசோதனையில் இருந்து தெரியவந்துள்ளதாக யாழ் மாநகர சபை சுகாதாரப் பகுதி மூலம் அறியவந்துள்ளது.

றெக்கிளமேசன் பகுதியில் சுமார் ஆறு பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது இரு பொதுக் கிணறுகள் மட்டும் பொது மக்களால் பாவிக்கப்படுவதாகவும் ஏனைய நான்கும் இவ்வாறு உடைக்கப்பட்டு குடியிருப்புக்களாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய செயல்களில் ஈடுபட்ட ஒருசிலர் இங்குள்ள பொது ஸ்தாபனங் களில் நிர்வாக உறுப்பினர்களாக தற்போது இருந்து வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## பிரிட்டன் மருத்துவ உபகரணங்கள் 15 ஆம் திகதிக்குமுன் யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் அரசினால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களின் இறுதித்தொகுதி எதிர் வரும் 15-ம் திகதிக்குப்பின்பே எடுத்துவரப்படும் என யாழ் போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய இவர் எமது நிருபருக்கு தகவல் தருகையில் வடபகுதி நோக்கிவருகின்ற கப்பல்களில் இடவசதி இன்மை மற்றும் கொள்கலன்களை ஏற்றி இறக்கக்கூடிய வசதிகள் குறைவாக இருந்தமையை அடுத்து இப்பொருள்கள் சிறுசிறு தொகுதிகளாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு இடைக்கிடையேதான் எடுத்துவரப்பட்டன.

அத்துடன் இப்பொருள்களை கப்பலில் எடுத்துவருவதற்கு சுகாதார அமைச்சினால் பணம் செலுத்த முடியாமையினால் புனர்வாழ்வு அமைச்சே இதனைப் பொறுப்பேற்று இங்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வந்துள்ளது.

இவற்றுள் ஒரு மின்பிறப்பாக்கி, எச்ஸ்றேகருவியின் உதிரிப்பாகங்கள் மற்றும் சில பொருள்களுமே எஞ்சியுள்ளன இவற்றை "பிளான்டியன்" கப்பலில் இங்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக தெரிவித்தார்

இக்கப்பலில் கொள் கலன்களை ஏற்றக்கூடிய வசதி இருப்பதனால் இக்கப்பல் மூலமாக ஒவ்வொரு கொள்கலனாக எடுத்துவந்தாலும் அது பலனளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்,

இது சம்பந்தமாக யாழ். போதனா வைத்தியசாலைப்

## பொலிஸ் உயரதிகாரிகள் பலர் தப்பியோட்டம்

(கொழும்பு)

பல வன்செயல்களுக்கு காரணமான பொலிஸ் உயரதிகாரிகள் பலர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளனர்.

தென்னிலங்கையில் இளைஞர்களை கொன்றமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் இவர்களின் மேல் சுமத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது,

## ஜனாதிபதி தேர்தல் வேலை ஐ.தே.க. ஆரம்பம்

## தொண்டையடைப்பான் கட்டுப்படுத்த நடவடிக்கை

முல்லை மாவட்டத்தில் வருடம் தோறும் ஏற்படும் வரட்சியின் காரணமாக மாடுகளுக்கு ஏற்படும் தொண்டையடைப்பான் நோயை துரிதமாக கட்டுப்படுத்தும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென நிறுவனவிலங்கு வேளாண்மைப்பகுதி பாரிய தடுப்பூசி போடும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. மிருக வைத்தியர்களின் உதவியுடன் பயிற்சி வழங்கப்பட்ட இளைஞர்கள் மூலம் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

இந்த வகையில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முல்லை போன்ற வட்டங்களில் முடிவடைந்துள்ள இந் நடவடிக்கை மணலாறு கோட்டம், நெடுங்கேணி வட்டம் ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### வைத்தியசாலை ஊழியருக்கான மண்ணெய் விநியோகம் நிறுத்துவதுகுறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு இம் மாதமும் அடுத்த மாதமும் மட்டுமே மண்ணெய் விநியோகம் செய்யமுடியும் என அதன் பதில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் சிறிலங்கா அரசினால் வடபகுதி மீது விதிக்கப்பட்டிருந்த மண்ணெய் எடுத்து வருவதற்கான தடை தளர்த்தப்பட்டமையைத் தொடர்ந்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊழியர்களே இனி வைத்தியசாலை மூலமாகவா அல்லது வெளியிலா கொள்வனவு செய்வதென்பதைத் தீர்மானிப்பர் எனவும் இதனை ஊழியர்களின் கவனத்துக்கு தாம் கொண்டுவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (பா) (தி)

## கொழும்பு-மட்டு பயணத்தில் சோதனைக் கெடுபிடி தளர்வு

(மட்டக்களப்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு புறப்படும் இரவு நேர பஸ் வண்டிகள் புனானை இராணுவ முகாமில் அதிகாலையிலேயே மட்டக்களப்பு செல்ல அனுமதிக்கப்படுகின்றன இதனால் முற்பகல் எட்டு மணிக்கே பஸ் வண்டிகள் மட்டக்களப்பை அடையக்கூடியதாக இருக்கிறது.

முன்பு காலை 7 மணிக்கு பின்பே வாகனங்கள் புனானை இராணுவ முகாமைக் கடக்க அனுமதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில் ஊறணி, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, வெலிகந்தை, மன்னம்பிட்டி போன்ற பல இடங்களிலும் வழமை போல பஸ் வண்டியிலிருந்து பிரயாணிகள் இறக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படும் போதும் வாகனங்கள் அதிக நேரம் தாமதிக்கப்படுவதில்லையாம்,

## தமிழர் நியமனம்

(நல்லூர்)

கல்விச் சேவை சபைக்குவரும் தமிழ் ஆசிரியர்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுமுகமாக கல்விச்சேவை ஆணைக்குழுவினால் உதவிக் கல்விப் பணிப்பாளர் தரத்திலுள்ள செல்வி உ. ம பி. ஜெயந்திலா பதவி நிலை உத்தியோகத்தர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை தமிழர் ஆசிரி

## சிங்கர் கிரிக்கெட்

இன்று ஆரம்பமாகும் சிங்கர் கிண்ண கிரிக்கெட் போட்டியில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணியும் இந்திய அணியும் மோதவுள்ளன

இத்தொடரின் இறுதியாட்டம் இம்மாதம் 17-ம் திகதி நடைபெறும்.

## புதிய தலைவர் நியமனம்

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக, எம். பி. ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். எம் ஐ. எம். ராபிக் உபதலைவராக

### சிந்தனைக்கு..

எந்தச் சமரச ஏற்பாட்டிலும், இன்றியமையாத விதி இழிவுபடுத்துவதாக அது அமையக் கூடாது என்பதும் பீதி அடைந்து செய்யப்பட்டதாய் அது இருக்கக் கூடாது என்பதும் ஆகும்.

- மகாத்மா காந்தி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04 09-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால்பெட்டி எண்- 05

## புலிகள் தங்கள் பங்கை நிறைவேற்றினர்

தலைவர் பிரபாகரன் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான தமது நல்லெண்ணத்தை மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்தியுள்ளார். இதற்கென போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு புலிகளின் பாதுகாப்பில் இருந்த பத்துப் பொலிசாரையும் விடுதலை செய்துள்ளார்.

இது குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் சமாதானத்திற்கான நல்லெண்ண சூழ்நிலை உருவாக்குவதற்கான புதிய அரசாங்கத்தின் முயற்சிகளை வரவேற்றுள்ளதோடு, அரசாங்கத்தின் இந்த சமரசமுயற்சிகளுக்கு பதில் நல்லெண்ண நடவடிக்கையாக பத்துப் போர் கைதிகளையும் விடுதலை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைமூலம், அரசியல்தீர்வு காண்பதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராகவுள்ளதென்பதும் அதற்காக சுமுகமான நல்லெண்ண சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கு தன்னால் ஆன நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் மேற்கொள்ளத்தயாராகவுள்ளது என்பதும் புதிய விடயமல்ல.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சமாதானத்திற்கான கதவுகளை விடுதலைப் புலிகள் திறந்தே வைத்துள்ளதோடு காலத்திற்குக் காலம், நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டும் பொருட்டு போர்க்கைதிகளை விடுதலை செய்தும் இருந்தது. ஆனால் அன்றிருந்த ஐ.தே.க. அரசாங்கம் அதைப் பொருட்படுத்தியதாக இல்லை.

சமாதான முயற்சிகளை மேற்கொள்ளப்பலர்தயாராக இருந்த போதும் அத்தோடு அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினையை இனப்பிரச்சினைஎன்பதையே ஏற்கமறுத்த ஐ தே க அர

விடுதலை செய்தும் இருந்தது. ஆனால் அன்றிருந்த ஐ.தே.க. அரசாங்கம் அதைப் பொருட்படுத்தியதாக இல்லை.

சமாதான முயற்சிகளை மேற்கொள்ளப்பலர்தயாராக இருந்த போதும் அத்தோடு அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினையை இனப்பிரச்சினைஎன்பதையே ஏற்கமறுத்த ஐ தே க அரசாங்கம் இராணுவத்தீர்வையே நாடியது. பேச்சுவார்த்தைகளுக்குப் பல நிபந்தனைகளையும் விதித்தது. இதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தன. புலிகள் காட்டிய நல்லெண்ண சமிக்கையும் பயனற்றுப்போயிற்று.

இந்நிலையில் மீண்டும் ஒருமுறை போர்க்கைதிகளை விடுவிப்பதென்பது விடுதலைப்புலிகள் இயக்கம் அன்று தொடக்கம் அரசியல்தீர்வு விடயத்தில் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதன் வெளிப்பாடே ஆகும். அத்தோடு இது புதிய அரசிற்குப் புலிகளின் நிலைப்பாடு குறித்து தெளிவான அறிவிப்புமாகும்.

வடபகுதி மீது விதிக்கப்பட்டிருந்த ஒரு தொகுதிப் பொருள்கள் மீதான தடையை நீக்கிய சிறிலங்காவின் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா அடுத்தநல்லெண்ண சமிக்கை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனிடம் இருந்தே கிடைக்கப் பெற வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தலைவர் பிரபாகரன் பத்துப் போர்க்கைதிகளை விடுவித்ததோடு இனப்பிரச்சினை தீர்விற்கு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்பதையும் அறிவித்துள்ளார். இந்தவகையில் விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட எப்பொழுதும் விரும்பவில்லை என்றே கூற முடியும்.

இதேவேளை இவ் அறிவிப்பானது சிறிலங்கா தரப்பு எழுப்பிய மற்றுமொரு முக்கியமானதொரு கேள்விக்கும் பதில் அளிக்கின்றது. அதாவது சமாதான முயற்சிகளுக்குக்கான அறிவிப்பு தலைவர் பிரபாகரனிடம் இருந்து வரவேண்டும் என்பதற்கான பதிலே இதுவாகும். இந்த வகையில் பத்துப் பொலிசார் விடுவிப்பானது நல்லெண்ணச் சமிக்கை மட்டுமல்ல. நிபந்தனையற்ற பேச்சிற்கு புலிகள் தயாரா என்ற தலைவர் பிரபாகரனின் பகிரங்க அறிவிப்புமாகும்.

இந்நிலையில் இனி இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு குறித்து முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது புதிய அரசாங்கத்தின் கடமையேயாகும். இதனை அரசாங்கம் செய்யாது பந்தை தமிழர் பக்கம் திருப்பி விடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களேயானால் இவர்களும் கடந்த காலச் சிங்களத் தலைவர்களில் இருந்து மாறுபட்டவர்களாகக் கருதப்பட வாய்ப்பில்லாது போகும்.

---

காரிகள் பலர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளனர்.

தென்னிலங்கையில் இளை

பட்டுள்ளன என தெரிவிக்கப் படுகிறது,

# ஜனாதிபதி தேர்தல் வேலை ஐ.தே.க. ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் ஈடுபடுவது தொடர்பான ஆரம்ப வேலைகளில் ஐக்கிய தேசியக்கட்சி தற்போது ஈடுபட்டுள்ளது. கட்சித்தலைவரும், ஜனாதிபதியுமான டி-பி விஜயதுங்காவின் ஆலோசனையின் பெயரில் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் ஜனாதிபதி டி பி விஜயதுங்கவுடன் எதிர்க்கட்சித் தலைவர் காமினிதிசாயக்க கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின்செயலாளர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர்கலந்துகொண்டு ஆலோசனை நடத்தியுள்ளனர்

# ஐ. தே. கவில் நாங்கள் உறுப்பினர்கள் அல்ல

- எஸ். தொண்டமான்

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியே புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரும் பட்சத்தில், ஏன் நாங்கள் புதிய அரசை ஆதரிக்க முடியாது என முன்னாள் அமைச்சர் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாங்கள் ஐ தே க உறுப்பினர்கள் அல்லர் ஐ.தே-க- பட்டியலில் மட்டுமே நாங்கள் போட்டியிட்டோம் ஐ-தே க வையும் பல தடவைகள் நாங்கள் எதிர்த்திருக்கிறோம்- எனவே ஐ- தே- க- கட்டுப்பாட்டில் இருக்கின்றேன் என கூறமுடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்-

# நடமாடும் சத்திரசிகிச்சை றோட்டறிக்கழகம் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் றோட்டறிக்கழகம் வைத்திய நிபுணர்களின் உதவியுடன் நடமாடும் சத்திர சிகிச்சை சேவையை நடாத்தி வருகிறது.

மேற்படி சேவை இதுவரை நான்கு இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் கோப்பாய் பகுதியில் இரு தடவையும் இங்கே 145 பேர் சிகிச்சை பெற்றனர். மற்றும் இணுவில் பகுதியில் இரு தடவையும் இங்கே 200 பேர் சிகிச்சை பெற்றனர்.

இச்சேவையானது மாதாந்தம் ஒரு முறை நடாத்தப்பட்டு வருகிறது. இவற்றிற்கு பல தொழில் அதிபர்கள் நிதியுதவி அளித்து வருகின்றனர். இதற்கான போக்குவரத்து வசதிகளை யாழ் சுகாதார பிராந்திய பணிமனை செய்து வருகின்றது. இச் சேவையில் கண் சத்திர சிகிச்சை நிபுணரும் அவர் குழுவினரும் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் பெரும் பங்காற்றி வரும் இவ்வேளையில் சிகிச்சை பெற்று கண்ணாடி தேவைப்படும் வறிய மக்களிற்கு இலவச கண்ணாடிகளையும் வழங்கி வருகிறது. (88)

---

களை ஏற்றக்கூடிய வசதி இருப்பதனால் இக்கப்பல் மூலமாக ஒவ்வொரு தொள்கலனாக எடுத்துவந்தாலும் அது பலனளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்,

இது சம்பந்தமாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் தொடர்புகொண்டுள்ளார் என தெரியவருகின்றது.

(தி) (பா)

## எறிகணை வீச்சு

(குருநகர்)

தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்காஇராணுவ முகாமில் இருந்துநேற்று முன்தினம்பிற்பகல் 3.30மணியளவில் யாழ். கரையோரப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. (21)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நாவலர் வீதி கைலாச பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக துணிப் பார்சல் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் து. சத்தியசீலன் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். (88)

## மருத்துவ வசதியின்மையால் கர்ப்பிணி ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

போதிய மருத்துவ வசதியின்மையால் புங்குடுதீவில் கர்ப்பிணி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 10-ம் வட்டாரம் வீராமலைப் பகுதியைச் சேர்ந்த சந்திரபாலன் செல்வமணி (வயது-34) என்பவரே பெண் குழந்தை ஒன்றை பிரசவித்த பின் போதிய மருத்துவ வசதி அளிக்கப்படாமையால் உயிரிழந்தார் என தெரிய வருகின்றது. புங்குடுதீவு, மற்றும் தீவகப் பகுதிகளில் பிரசவத்தை எதிர்நோக்கியுள்ள கர்ப்பிணிகள் நயினாதீவில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்கே கொண்டு செல்லப்படுவதாக மேலும் தெரியவருகின்றது. (22)

---

தேவைகளை அறிந்து நிறைவேற்றுமுகமாக கல்விச்சேவை ஆணைக்குழுவினால் உதவிக் கல்விப் பணிப்பாளர் தரத்திலுள்ள செல்வி உ. ம பி. ஜெயந்திலா பதவி நிலை உத்தியோகத்தர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை கல்விச் சேவைச் சபையில் தமிழ் அதிகாரி எவரும் கடமைபுரியாமையினால் பலவித இடர்பாடுகளை தமிழ் ஆசிரியர்கள் எதிர் கொண்டார்கள் எனவும் இக்குறைபாடு இவரின் நியமனத்தை தொடர்ந்து நிவர்த்தியாக வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இவர் மேலும் தெரிவித்துள்ளார். (17)

## தொழில்திறன் விருத்தி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், யாழ் கல்வித் திணைக்களவலயம்இரண்டின் முறைசாரா கல்விப்பிரிவும் இணைந்து நடாத்தும் தொழில்திறன் அபிவிருத்தி பயிற்சி நெறியான மோட்டார் சைக்கிள் திருத்துதல், உடையமைத்தல் பயிற்சி நெறிகள் யாழ் இணுவில் மத்தியகல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முறைசாராக்கல்விப்பிரிவின் வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதனின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இக் கற்கை நெறியின் ஆரம்பநாள் வைபவத்தில் வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் க. கநீதசாமி, ரீ ஆர். ஆர். ஓ உப தலைவர் திரு. நல்லதம்பி, விரிவுரையாளர். எஸ். பாலகுமாரன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். (05)

## இறுதிப்பரீட்சை

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று நூனசித்தி பெற்ற ஆசிரியர்கள் மீண்டும் இறுதிப்பரீட்சைக்கு தோற்றவிரும்பின் எதிர் வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டுமென கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

---

## புதிய தலைவர் நியமனம்

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக, எம் பி. ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். எம் ஐ. எம். ராபிக் உபதலைவராகவும் நேற்று கப்பற் போக்குவரத்து அமைச்சர் எம் எச். எம். அஷ்ரப்பால் நியமிக்கப்பட்டுள்ளார்,

## உரத்துடன் ஹபறண

யாழ் குடாநாட்டிற்குத் தேவையான சுமார் 2000 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிக்கொண்டு ''ஹபறண'' என்கின்றகப்பல் பருத்தித்துறை நோக்கிப் புறப்படவுள்ளது.

கொழும்புத்துறை முகத்தில் வைத்து இக்கப்பலில் உரம் ஏற்றும் பணிகள் நடைபெற்று வருவதாகதெரிவிக்கப்பட்டது

எனினும் இக்கப்பல் அங்கிருந்து புறப்பட்டதாக தகவல் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை. (பா) (தி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 09. 04**

**ஞாயிறு இரவு**

08. 01 - இசையரங்கம் - நிகழ்ச்சியில் திரு. அ. ஜெயராமன் அவர்களின் வயலின் இசை இடம் பெறும்.
08. 30 - செய்திகள்
08. 40 - தொடர் நாடகம் -இலங்கை மண் 38 ம் அங்கம்

**1994. 09. 05**

**திங்கள் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# தமிழகத்தில் குண்டுவெடிப்புகள் மூவர் பலி; 8பேர் படுகாயம்

(சென்னை)

நேற்று தமிழ்நாட்டில் இரு வேறு இடங்களில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டதுடன் எட்டுப்பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் ரோந்து சென்ற பொலிசார் விசாரணைக்கென அணுகிய ஒருவர் தன்னிடமிருந்த கைக்குண்டை வெடிக்க வைத்தார். இதனால் கைக்குண்டை வெடிக்க வைத்தவரே பலியானார். தீவிரவாதஅமைப்பொன்றைச்சேர்ந்தவராக இவர் இருக்கலாமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் இருவர் கொல்லப்பட்டதுடன் எட்டுப்பேர் வரை டடுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம்பற்றி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சிப்பாய் படுகாயம்

(கொழும்பு)

கடந்து புதனன்று திருகோணமலையில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலொன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த சிப்பாய் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பிரதமர் சந்திரிகாவைக் கொல்வதற்கு வெடிகுண்டு பொருத்திய கமரா

(கொழும்பு)

கண்டியில் வைத்து, பிரதமர் சந்திரிகாவைக் கொல்ல இருந்தவர் புகைப்படக் கமராவினுள், வெடிகுண்டை வைத்திருந்ததாக விசாரணைகளிலிருந்துதெரியவந்துள்ளது

மேற்படி நபர், பிரதமரின் பாதுகாப்புக் குழுவில் இருந்தவரென்றும், அடையாளம் தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டு கண்டி நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டாரென்றும், பிரதமரைக் கொலை செய்ய யாரோ ஒருவர் தமக்கு ஆணை பிறப்பித்திருந்ததாகவும், பொலிசாரிடம் சரணடைந்துள்ள கொலைச் சதியில் ஈடுபட்டவர், விசாரணைகளில் கூறியுள்ளார்.

கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவர், மாவனல்லை என்னும் இடத்தில் வாகனத்திலிருந்து குதித்து, பொலிசாரிடம் சரணடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தலைமைமாற்றநினைப்பின் தலை எழுத்தே மாறிவிடும்

-வாழப்பாடி எச்சரிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் கடசிக்கு தேர்தல் நடத்தாமல் தலைமையை மாற்ற நினைத்தால் இ காங்கிரஸ் சட்சியின் தலை எழுத்தையே மாற்றி விடுவோம் இவ்வாறு தமிழ்நாடு இ.காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், ராஜீவின் ரத்தத்தால் வெற்றி பெறவில்லை என்று சொன்ன பின்பும் தலைமுறை இடைவெளி இருப்பதாக முதல்வரே கூறிய பின்பும் கூட இன்னும் அந்தக் கட்சியுடன் ஒட்டு வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தால் நாக்கை பிடுங்கிக் கொண்டு சாவதைத் தவிர வேறு வழியில்லை.

அகில இந்திய காங்கிரஸ் தான் தாய் ஸ்தாபனம். ஆனால் இந்த ஸ்தாபனம் தமிழகத்தில் இ. காங்கிரஸ் சட்சியை உதாசீனப்படுத்துகிறது. தமிழக காங்கிரஸ் கட்சி சொல்வது எதையும் அது கேட்பது இல்லை. தமிழக காங்கிரஸ் வாழ்வதா? சாவதா? என்ற நிலையில் நாம் எதிர்ப்புக் குரலைக் காட்ட வேண்டியிருகிறது, அதை செயற்படுத்தாமல் இருந்தால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியே இருக்காது எனவும் தெரிவித்தார்.

# படை முகாம்களை அகற்றி வழிபாட்டுக்கு வழி செய்க

இந்து சமயப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவம் நிலை கொண்டுள்ள புனித வழிபாட்டுத் தலங்களில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றி அங்கு பூசைகள் நடைபெறவும், மக்கள் சென்று வழிபடவும் ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துமாறு அரசாங்கத்திற்கு விடுத்த வேண்டுகோள் எதற்கும் இதுவரை செவிசாய்க்கப்படவில்லை. இந்துக்கள் மீதான இக் கெடுபிடிகள் உடனடியாக நீக்கப்படுவதுடன்பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் வரலாற்றுப் பெருமை மிக்க இந்து ஆலயங்களுக்கு இந்துக்கள் சென்று அமைதியாகவும், சுதந்திரமாகவும் வழிபாடு செய்ய ஏற்ற ஒழுங்குகளை செய்யுமாறும் பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவிடம் இந்துசமயப் பேரவை வேண்டுகோள்விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ளஒரு அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு எடுத்திருக்கும் முடிவை வரவேற்பதாகவும், வடபகுதி தமிழ் மக்களுக்குத் தாங்கொணாத் துன்பங்களை ஏற்படுத்தியுள்ள மனிதாபிமான மற்ற பொருளாதார போக்குவரத்துத் தடைகளை எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக நீக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## வானொலியில் ஒலிபரப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட 10 பொலிஸ் யுத்தக்கைதிகள்தொடர்பான தொகுப்புநிகழ்ச்சியொன்றை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஒலிபரப்பியது இவர்களை வரவேற்க விமான நிலையத்தில் காத்திருந்து உறவினர்களிடமும் அதிகாரிகளிடமும் பெறப்பட்ட பேட்டிகளும் இந் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டன.

இதேவேளை சிறிலங்கா ரூபவாகினியும் கைதிகள் விடுதலை தொடர்பான காட்சிகளை ஒளிபரப்பியது.

# இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

01.09.1994



செல்வன்

செபமாலை நேசன் யுபின்சன்எஸ்லி

முடக்காடு நெல்லியடி 'கரவெட்டியைச் சேர்ந்த செபமாலை நேசன் றோசலின் தம்பதிகளின் செல்வப் புதல்வன் யுபின்சன் எஸ்லி இன்று இரண்டாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, அப்பம்மா, அம்மப்பா, பெரியமாமா, ஆசைமாமா, சின்னமாமா, குட்டிமாமா, அன்ரி, பெரியமாமா, பெரியமாமி, சின்னமாமா, சின்னமாமி, மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள் யுபின்சன்எஸ்லியை புனித அந்தோனியார் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் நீடூழி காலம் வாழ அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

முடக்காடு,
கரவெட்டி,

தகவல்
தே. அன்ரனி (மாமா)
(5894)

## புலிகள்

புலிகள் செய்துள்ள நல்லெண்ண நடவடிக்கையே, போர்க்கைதிகளின் விடுவிப்பாகும் என பி. பி. சி. தெரிவித்துள்ளது.

## தாயையும்

கையையும் கோடரியால் வெட்டிக் கொன்றுள்ளார் மேலும் சகோதரனையும் கோடரியால் வெட்ட முயன்ற போது அவர் கோடரியைப் டறித்துச் சென்று காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளார்.

மேலும் சம்பந்தப்பட்ட

## இனப்பிரச்சினை

தெரிவித்தார்.

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் நடு பெரிதும் பாதிப்பு அடைந்ததே தவிர நன்மையொன்றும் ஏற்படவில்லை.

அரசிய தீர்வு காணும் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஐ. தே. க இருந்தால் இதனை அவர்கள் குழப்பி விடுவார்கள் என்றும் எனவே இதனை தவிர்ப்பதற்காகவே ஜனாதிபதி அதிகாரம் புதிய அரசாங்கத்திற்கு கிடைத்த பின்னர் இதனைச் செய்வது மிக உசிதமானநடவடிக்கையாகஅமையும் என மேலும் தெரிவித்தார்.

## வடபகுதி

எனினும் இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள முடியாது எனவும் படிப்படியாக நடவடிக்

## பொலிஸ்

தில் விடுவிக்கப்பட்ட பொலிசாரின் குடும்பத்தினரும், அரசாங்க அதிபர்களும் பொலிசாரை வரவேற்க காத்திருந்தனர் எனவும் இலங்கை வானொலி தெரிவித்துள்ளது. அங்கு ஏற்கனவே குழுமிநின்ற விடுவிக்கப்படும் பொலிசாரின் பெற்றோர்களும், உறவினர்களும், நண்பர்களும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு காணப்பட்டனர். புலிகளின் காவலில் இப்போதும் இருக்கின்ற கைதிகளின் பெற்றோர்களும் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

முன்னதாக, பலாலி விமானதளத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, விடுவிக்கப்பட்ட பொலிசாரை வரவேற்று உரையாற்றினார் எனவும் அது தெரிவித்தது.

## வீரச்சாவு

கள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

★ ★ ★

பூநகரிப் பகுதியில் கடந்த 30-ம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சூரக்குட்டி / முத்து அல்லது சுந்தர்ராஜன் (எட்

## இலங்கையில்

அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 2200 பாடசாலைகள் தலா நூற்றுக்குக் குறைவான மாணவர்களையும் இரண்டு ஆசிரியர்களையும் கொண்டவையாக அமைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஏனைய

தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட பொலிசாரை பலாலி விமானத்தளத்தில் வைத்து வரவேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தற்சமயம் புலிகள்வசம் உள்ள ஏனைய பொலிசாரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

இதேவேளை திறந்த அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளும், அரசியற் செயற்பாடுகளும்தான் இனப்பிரச்சினை தீர்வுக்கு வழிவகுக்கும்: இவ்வாறு சிறிலங்காவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

நேற்று வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்த அவர் படையினர் மத்தியில் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது எந்தவிதமான இரகசியச் செயற்பாடுகளும் இருக்க மாட்டாது எனவும், முன்னைய அனுபவம் கவனத்தில் எடு துக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

# நல்லைக் கந்தன் இன்று தேர்

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர் உற்சவம் இன்று காலை 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை காலை 7.00 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும்,

## ஏனைய பொலிசார்

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

93-ம் ஆண்டு புலிகளால் விடுதலை செய்யப்பட்ட, பொலிசாரான சனத் குணவர்த்தன என்பவர் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் நான் உண்ணாவிரதம் இருந்தேன். எனது உடல் நிலை மோசமடைந்து வருகிறது எனக் கூறப்பட்டதைத் தொடர்ந்து புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் என்னை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்தார். இன்று நான் எனது நண்பர்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேன் என தெரிவித்தார்.

யாழ். ஸ்ரீதர் அகல வெண்திரையில்...
தினசரி காலை 10.30 மணிக்கு
WAY OF THE DRAGON
[கராட்டி]

(5894)

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் கௌதமன்

மயிலியதனை தொண்டமானாற்றைச்சேர்ந்த விஜயகுமார் விஜயகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கௌதமன் இன்று 4-9-94 - இல் தனது முதலாவது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றார். இவரை சகல கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் சந்நிதியான் அருள்பெற்று வாழ்கவென வாழ்த்துவோர் அன்பு அப்பா, அம்மா, அக்காமார்களான கௌசியா, தர்சியா, அப்பாச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமிமார், மாமாமார், அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மச்சாள்மார், மற்றும் தொண்டமானாற்றில் இருக்கும் ராசுமாமா, மாமி, மாகரன் ஆனந் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்த்துகின்றார்கள்.

- குடும்பத்தினர்

(9276)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

[illegible]துள்ளார்.

மேலும் சம்பந்தப்பட்ட நபர், அங்கு வந்த அயலவர்களுக்கு இவர்களின் மரண வீட்டிற்கு பணம் என்று பல ஆயிரம் ரூபாவை எடுத்து எறிந்துவிட்டு அவரும் கழுத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சி செய்தபோது பொதுமக்கள் கயிறினை அறுத்து அவரை மீட்டனர்.

இவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்கு பின்னர் காவல் துறையினர் கைது செய்துள்ளனர் என தெரியவருகின்றது

இச்சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த நவரத்தினம் வியாலாட்சி இரத்தினம் (வயது 46) இவரது மகள் நவரத்தினம் யசோதா (ரதி) (வயது 23) ஆகியோரே கொலைசெய்யப்பட்டவர்கள் ஆவர். (86)

## படையினருக்கு

வடக்கு, கிழக்கு இராணுவ முகாம்களுக்கான விஜயம் மேற்கொள்ளும் நோக்குடன் புறப்படும்போது அமைச்சரவையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின் போது இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

முதன் முதலாக வடபகுதி முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் இதனை அடுத்து இன்று கிழக்கு மாகாண இராணுவ முகாம்களுக்கு விஜயம்மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை படையினரின் நலன்கள் மற்றும் தேவைகள் நிறைவுசெய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கொள்ள முடியாது எனவும் படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தா[illegible]

## லண்டனில்

குழு ஒன்று பயணமாகியிருப்பதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து, இந்த ஆய்வுப் பட்டறைக்கு செல்லும் அதிகாரிகள் இங்குள்ள தற்போதைய நிலைபற்றியும், மருத்துவ சீர்கேட்டினால் துயரப்படும் மக்களின் நிலையை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வு பற்றியும் அங்கு முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது

அடுத்த வாரம் அளவில் இக் குழுவினர் கொழும்பிலிருந்து இலண்டன் பயணமாகின்றனர்.

அரசாங்க அதிபர்கா. மாணிக்கவாசகர், நச்சினார்கினியர், சோமசுந்தரம், சிவராஜா, தெய்வேந்திரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி கனகரட்ணம் ஆகியோர் கொண்ட குழுவே இலண்டன் பயணமாகின்றது.

(தி, பா)

## பொருள்கள்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டில் வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் ஆனால் அதுகுறித்து மிகவும் அவதானமாக நடந்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கத்திற்கு தான் தெரிவிக்க விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

## பூநகரி

மிகவும் பெறுமதிவாய்ந்த இச்சிலை, பூநகரியில் இருந்தது எனக் கூறப்பட்டாலும், கீரிமலை சிவன்கோயில் போன்ற ஆலயங்களிலேயே இவ்வாறான சிலைகள் காணப்படுவதாகவும், இப்பிரதேசங்கள், இப்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருப்பதையும் கொழும்பு தினசரி ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

ங்கை சூரக்குட்டி / முத்து அல்லது சுந்தர்ராஜன் (எட்வின் பொன்சேகா சுனித் பொன்சேகா, மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்

## தடையை

பாதை அவசியம் அவ்வாறான ஒரு பாதை இல்லாவிட்டால் இப்பொருளாதாரத் தடை நீக்கத்தால் யாழ் குடாநாட்டு மக்கள் எந்த ஒரு நன்மையையும் அடையப்போவதில்லை கடல்மார்க்கமாக பொருள்களைக் கொண்டு செல்வது பெருமளவு பணவிரயத்தையும் கால தாமதத்தையும் ஏற்படுத்துவதாகும்

இதேவேளை கடல்மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும் பொருள்களுக்கு பெருமளவு கப்பற் கட்டணம் அறவிடப்படுகிறது. இதனைப் பொது மக்களே சுமக்கின்றனர். பொதுமக்களின் நுகர்வுப் பொருள்களிலேயே இது அறவிடப்படுகிறது என மேலும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறார். ஆனால் தென் பகுதியில் அவர் வந்து பேச்சுகளில் கலந்து கொள்ள முடியாது. இதற்கு காரணம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது இருப்பதினால் ஆகும் எனவே திருமதி சந்திரிகா குமாரணதுங்க யாழ்ப்பாணத்திற்கு பேச்சுவார்த்தைக்கு வருவதை நான் விரும்புகிறேன்.

வடபகுதியில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீண்டும் அப்பகுதிக்குச் சென்று வாழமுடியும் என விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தெரிவித்துள்ளார் என அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.

[illegible] OF THE DRAGON

[கராட்டி]

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

CIRCUS

உதைபந்தாட்ட ரசிகர்களுக்காக

சனி, ஞாயிறு பி. ப. 2.15 மணிக்கு

SOCCER WORLD CUP - 1994

BRAZIL VS ITALY - FINAL

உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994

பிறேசில் எதிர் - இத்தாலி - இறுதி ஆட்டம்

(சி-10230)

# மரண அறிவித்தல்கள்

## வயிரவப்பிள்ளை மயில்வாகனம்

வசாவிளான் தெற்கை பிறப்பிடமாகவும் தற்பொழுது சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையில்வசிப்பவருமான வயிரவப்பிள்ளை மயில்வாகனம் அவர்கள் 3-9-94 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் சாவித்திரியின் அன்புக் கணவர் ஆவர். அன்னாரின் பூதவுடல் 4-9-94 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ம. தற்பரன்

திருமதி சதாசிவம்,
ம/பா பூபாலசிங்கம்,
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

(9283)

## S. P. நடராசா

(இ. போ. ச. மெக்கானிக்)

S. P. நடராசா 3 - 9 - 94 அன்று காலமாகிவிட்டார். (மெக்கானிக், கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை டிப்போ) அன்னாரின் பூதவுடல் அவரது சகோதரி இல்லத்திலிருந்து பிரான்பற்று இந்து மயானத்திற்கு இன்று 4 - 9 - 94 மாலை 2 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஐ. தங்கப்பவுண்
(மருமகன்)
சகோதரர்கள்

முல்லையடி வீதி,
பண்டத்தரிப்பு.

(9281)